# பழனியாண்டவர் சிந்துபாமாலை





பதிப்பாசிரியர் : எஸ். தியாகராசன், எம்.ஏ., பி.எல்.,

பொதுப் பதிப்பாசிரியர் : நடன காசிநாதன், எம்.ஏ.,

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடிகள் வரிசை எண் : 83

# பழனியாண்டவர் சிந்து பாமாலை

*பதிப்பாசிரியர் :*

**எஸ். தியாகராஜன்,** எம்.ஏ., பி.எல்.,

தமிழ்ப் புலவர்,

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,

சென்னை-600 005.

*பொதுப்பதிப்பாசிரியர் :*

**நடன. காசிநாதன்,** எம்.ஏ.,

இயக்குநர்,

தொல்பொருள் ஆய்வுத்துறை,

சென்னை-600 113.

©

தமிழ்நாடு அரசு

1995

விலை ரூ. 40

Printed by

**Royapettah Stationery and Printing and Allied Products**

**Producers Indl. - Co.op Society Ltd.**

26, Koya Arunagiri First Street Royapettah

Madras - 600 014. ☎ : **84 56 70**

Government Oriental Manuscripts Series No.83

# PAZAHANIANDAVAR SINDHU PAMALAI

*Edited by :*
**S. THEAGARAJAN,** M.A., B.L.,
Tamil Pandit,
Government Oriental Manuscripts Library,
Madras-600 005.

*General Editor :*
**NATANA. KASINATHAN,** M.A.,
Director,
State Archaeological Department,
Madras-600 0113.

©
Government Oriental Manuscripts Library
1995

Price Rs. 40

# பொதுப்பதிப்பாசிரியர் முன்னுரை

அரசனிர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகச் சுவடிகளில் அச்சில் வெளிவராத தமிழ்ச்சுவடிகள் இன்னும் உள்ளன. இவற்றை அச்சிற்குக் கொண்டு வருவதில் தமிழக அரசு அண்மைக்காலங்களில் உதவி வருகின்றது.

இத்தகைய தமிழக அரசின் முயற்சியால் இதுவரை வெளிவராமல் இருந்த பழனியாண்டவர் சிந்து பாமாலை என்னும் இலக்கிய நூல் தற்போது முதன்முதலாக அச்சிட்டு வெளியிடப் படுகின்றது.

இந்நூலில் உள்ள பாடல்கள் படிப்பதற்கு இனிமையாக உள்ளன. இலக்கிய ஆய்வாளர்களுக்குச் சிறந்த நூலாக அமையும்.

இதுபோன்ற இன்னும் அச்சில் வராத பல நூற்களை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளிக்கொணர இருக்கின்றது.

கடந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த புலவர்கள், மக்கள் முதலியோர் குறித்த செய்திகளை எல்லாம் அறிவதற்கு இதைப்போன்ற வெளியீடுகள் தேவையானதாகும்.

இத்தகைய நூற்களை அச்சிடுவதற்குத் தொடர்ந்து உதவிய சா. பா. இளங்கோவன், இ. ஆ. ப. அவர்களுக்கும், இரா. கிறித்துதாசு காந்தி, இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றி உரியது.

இந்நூலைச் சுவடியிலிருந்து பதிப்பித்த இந்நூலகப் புலவர் எஸ். தியாகராாசன், எம்.ஏ., பி.எல்., அவர்களுக்கு நன்றி.

அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகக் காப்பாட்சியர் டாக்டர் **எஸ். சௌந்தரபாண்டியன்,** எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பி.எச்.டி., அவர்களின் தொடர்ந்த முயற்சிகளுக்கும் நன்றி உரித்தாகும்.

நடன. காசிநாதன், எம்.ஏ.

# அணிந்துரை

பழனியாண்டவர் சிந்து பாமாலை என்னும் இந்நூல் மதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் மகனார் குமாரசாமிக் கவிராயரால் எழுதப்பட்டது.

இதுகாறும் அச்சில் வராததாகக் கருதப்பெறும் இம்மாலையில் குறவஞ்சி, பள்ளு, ஏசல் ஆகிய இலக்கியங்களின் சுவைகள் நிரம்பியுள்ளன. சிந்து யாப்பிற்கே உரிய மிடுக்கான நடை எவரையும் ஈர்ப்பதாக உள்ளது.

நூலில் வரும் 'போலீசு' போன்ற சொற்களால் இதன் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டை ஒட்டி இருக்கலாம்.

இந்நூல் பழனியில் கோயில் கொண்டிருக்கும் முருகன்மேல் பாடப்பட்டுள்ளது. குறிப்பாக வள்ளி திருமணம் என்ற தமிழகத்தில் புகழ் பெற்ற நாடகக் கதையைக் கூறுவதாக உள்ளது. விருத்தங்கள் இடையிட்டுப், பெரும்பாலும் சிந்துக் கண்ணிகளால் பாடப்பட்டுள்ள இந்நூல் படித்து இன்புறத்தக்கது.

இந்நூலில் 'மிதிலைப்பதி மல்லைக் கவிராசன்' என்று இவருடைய தந்தையாரின் பெயரை அகச்சான்றாகக் குறிப்பிடுகின்றார். இவருடைய குலதெய்வம் முருகன் என்பதற்கு அகச்சான்று உள்ளது.

எனவே தமிழ்ப் புலவர்கள் வரலாறு தொகுக்க இந்நூல் பெரிதும் பயன்படுகின்றது. நூலாசிரியரின் காலத்திலும், அதற்கு முன்பும் பாடப்பட்ட சிற்றிலக்கியங்களின் தாக்கம் இந்நூலிலுள்ளதால் இந்நூலைச் சிற்றிலக்கிய வளர்ச்சியில் வைத்து ஆய வேண்டும்.

**டாக்டர். எஸ். சௌந்தரபாண்டியன்,**
எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பி.எச்.டி.,
காப்பாட்சியர்,
அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை-600 005.

# முன்னுரை

இந்நூல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக ஓலைச் சுவடி எண் ஆர். 4975-லிருந்து பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் அழகு குமாரசாமிக் கவிராயர் ஆவார். இவர் அழகிய சிற்றம்பலக் கவிராயரின் மகனாவார். இக்குமாரசாமிக் கவிராயர் சுசீல வள்ளல் அம்மானை (தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, பதிப்பாசிரியர் டாக்டர். எஸ். சௌந்தர பாண்டியன்) என்ற நூலையும் எழுதியுள்ளார். இக்குமாரசாமிக் கவிராயரின் காலம் 17-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி ஆகலாம் (பதிப்புரை, பக்கம்-14, மேற்படி நூல்) என்று வரையப்பட்டுள்ளது.

நூலின் அமைப்பைக் கொண்டு, பழனியாண்டவர் சிந்து பாமாலை என்ற இந்நூல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம்; பழனி முருகன் மீது எழுதப்பட்டிருக்கும் இந்நூலில் 634 கண்ணிகள் உள்ளன. இனிமையான அடிகளைக் கொண்டுள்ளது.

ஆய்வாளர்கள் இதனைப் பயன் கொள்வார்களாக.

**எஸ். தியாகராஜன்,**
தமிழ்ப் புலவர், அ.கீ.சு. நூலகம்,
சென்னை-600 005.

கண்டாயடா அந்தகர் சிவன்பாலன் கருத்துளதால்
அண்டாதடா யெந்தன் சீவன்விடுமுன் அகன்றுவிடு
வெண்டாமரை வசித்தாளெந்தன் பாலில் விளங்குகையாலத்
தெண்டாயுத கரத்தெந்தை பொற்பாதந் தினந்துணையே.

## ஹரி ஓம்;

இஃது மிதுலைப் பட்டியிலிருக்கும் அழகு குமாரசாமிக் கவிராசன் இயற்றியது. பழநி ஆண்டவன் பேரில் சிந்து பாமாலை.

## சாற்றுக்கவி

தண்டமிழ் தேர்வாணர் குழாத்திருந்து இந்தத்
தமிழ்ரங்கத் தேற்றினவன் தானா ரென்னில்
கண்ட நவ கண்டமெல்லாம் போற்று மல்லைக்கவிஞர்
குலத்திற் செனித்தோன் கந்தர் தாசன்.

வெண்டரள மாலைபுனை வாழ்நா வுள்ளான்
விரும்பி இந்த ஆனந்தக் களிப்பைப் பாடிக்
கொண்டல் வருசித்தது போலஉலகோர் வாழ்த்தக்
குமாரசாமிக் கவிஞன் கூறி னானே.

வருஞ்சவுமியா வருடம் துலா மாதத்தில்
வந்த முப்பதாந் தேதி சோமவாரம்
பெருந்துதி கையான் திதிகேட்டை நட்சத்திரத்தில்
பிரபல சித்தயோகம் பெற்ற சுபதினந்தான்.

அருமை யறியும் பாண்டிக் கவிஞர் மைந்தனழகிய
சிற்றம்பல மாலரன்றாள் வேண்டி
ஒருமைய தாயினிப் பிறவாநெறியைத் பெற்று
உமைபாகன் றனைப்பணிந்திங் குரைத்திட்டானே.

## (நூல்)

ஆடுமயி லேறுகின்ற வீரன் - பழநி
யாண்டவ னடியாருக் கன்புமிகு தீரன்
பாடுவார்க் கன்புள்ள சீலன் - வந்து
பணிவார்க்குப் பணிதீர்க்கு பாக்கிய வேலன்.

தும்பிமுக வர்க்கிளைய தம்பி - யெனவந்து
துதிப்பவர்கள் மதிப்பவர்கள் துயர்தீர்க்கும் நம்பி
வெம்பிமனம் புண்ணாகும் பிணியை - மருந்து
வேறின்றி வேல்கரன் பண்டித மணியை.

யென்றென்று மறவாத பேரை - பழநி
யெந்தை யார்வே றெண்ணுமவர்ச் சீரை
என்றெல்லாம் நின்றுவிளை யாடும் - எங்கள்
குமரேசன் ... பாகத் தாடும்.

ஆறாறு சண்முக நதியான் - தன்னை
யணுகாத பேர்களை யகந்தினிலு மதியான்
வீறாறு சூரர்களை(த்) தடிந்தான் - சக்தி
வேலாயுதத் தாலே வென்றவரைக் கடிந்தான்.

சென்னியோ ராறுடைய லோலன் - யெந்தன்
சிந்தமதிற் குடியிருக்குந் சிங்கார வேலன்
பன்னிரு கையுடைய சீலன் - யென்றும்
பழநியில் வீற்றிருக்கும் பங்கை யனுகூலன்.

சரவணப் பொய்கை யொன்றுள்ளான் - யிற்றுந்
தன்மீதி லன்புள்ள பேர்களையுந் தள்ளான்
அரவணையிற் றுயில்மாயன் மருகன் - பக்தர்க்
கனுகூல மேசெய்யும் ஆறுமுக முருகன்.

தகரேறிப் பவனி செய்ததீரன் - நாரதர்
தன்கெனுவடக்கிட்ட வீரன்
இகந்தினில் கதிகொடுக்கு மெய்யன் - நெஞ்சில்
யென்ணாத பேர்கட்கு யென்றுமே பொய்யன்.

சக்திவேல் தன்னையே விடுத்து - வாரித்
தன்னில் மைகுன்றவே கணமதனில் மடுத்து
முக்திமக மேருவைப் பொடித்து - அகத்திய
முனி நாரதர்க் குபதேசம் படித்து.

குன்றுதோ றேறியு நடித்துக் - குன்றைக்
குடியாக யெண்ணியே குமரேசன் முடித்து
நன்றுபரங் குன்றமதை யடுத்து - யதனில்
நற்கீர தேவருக்கு முக்தியருள் கொடுத்து.

தேவர்க்குந் தேவாக முளைத்து - யந்தச்
செகதீசன் றன்னை யுந்தன் முனமழைத்து
மூவர்க்கு முதல்வர்க்கு மந்திரந் - தன்னை
முற்றிலு முரைத்திட்ட முருகேசன் தந்திரம்.

யென்னவென்று யானெடுத் துரைப்பேன் - அய்யன்
இயல்புதனை இப்பூவி லெங்கனம் நிறைப்பேன்.
சொன்னமொழி தவறாது துய்யன் - செகக்
சோதியாய் அடிப்பர்க்குத் துயரகற்று மெய்யன்.

கன்னல் செந்நெல் மாப்பலாத் தேங்கும் - அங்கு
கமுகுநா ரத்தை யெலுமிச்சை பலவோங்கும்
சத்துமுகி லொன்றாகிக் கூடி - அய்யன்
நான்வாழும் பழநியந் தலந்தன்னை நாடி.

மெத்துக்கு மறிமின்னல் கோடி - சொலித்து
மேன்மேலாய்ப் பொழியுதங்கு வேலரைத் தேடி
அண்டர்சிறை தீர்த்துமுரு கைய்யன் - பழநி
ஆண்டவனடியார்க்கு அன்புள்ள மெய்யன்.

சண்டன் அணுகாது வரந்தருவார் - அன்று
சத்தியரு ளும்பாலர் மயிலேறி வருவார்.
சுற்றிவரை யெங்கெங்கும் பார்த்து - பழநி
சூழல்தன்னில் சரமிழலை சுகமென்று ஆர்த்து

வெற்றிவேல் தெண்டுமுள்ள கரத்தார் - அன்பர்
விருப்பப்படி யன்றே தருகின்ற வரத்தார்.
மீதினிலே ஆசை மிகுந்து - மிதுல
மேநகர மதில்வாழ்வு மேன்மேல தகுந்து

வாதினிலே வென்றகவி வல்லோன் - மல்லை
வருசிற்றம் பலக்கவிஞர் வங்கிசத்தில் நல்லோன்.
மால்குமர சாமிமன மகிழ்ந்து - சிந்து
வள்ளிமண வாளர்மே லன்பொடு புகழ்ந்து

பால்முக் கனிசருக் கரைதேன் - கலந்து
பாகென்னச் செந்தமிழைப் பாடுதலு மேதான்.
ஆசையென் சொற்கேளாத தாலே - கற்ற
அறிவாளர் முன்சிறியோன் அறைதல் பனிப்போலே

ஓசைமிகும் பாற்கடலின் முன்னே - கைப்பு
உற்றிடும் உவர்க்கடல் போலடியன் யின்னே.
சொன்னயிந்த ஆனந்தக் களிப்பை - குதலைச்
சொற்போலக் கொள்ளுவர்கள் விள்ளார்கள் பழிப்டை

நம்பி ராசன் கண்டெடுத்த - வள்ளி
ரஞ்சித மின்னாள் வடிவைநான் சொல்லித் தொடுத்த.
கொம்பின் மேற்றொங்கு மாங்கனிக்கு - ஆசை
கொண்ட முடவன்போல் கேட்பவர் மினிக்குக்

காட்டுவேன் இலைக்குமியும் நிகரோம் - வாலை
கலைமாது யிந்திராணி காணாதாற் பகரோம்
சூட்டுவேன் செந்தமிழால் வடிவை - யதுவுந்
சொல்குயில் மயில்கிள்ளை காணாது முடிவை.

முகில்கரிய மணல்கூந்தல் கிணையாள் - கற்றார்
மொழிகுவாரிணை சொல்ல முடியாது துணையாய்
அகிலம்ஒளி செய் மூன்றாம் பிறைதான் - நெற்றிக்
கடுக்குமா வேதனால் மைத்தது வுமிதுதான்.

வில்லையே புருவமென்று உரைப்பார் - அதுவும்
வீணாகுமென் றறிஞர் விரும்பார்கள் கசப்பாய்
செல்லயை கண்ணாடி யென்று - உலகில்
செப்பிடிலொப் பாதுயிப் புவியில் நன்று.

சத்திதந்த வேலென்பர் கண்ணே - யதுவுஞ்
சரிசொல்லக் கூடாது வள்ளியென்ற பெண்ணே
வெத்தியது யெட்யூவை நாசி - யதனை
விளங்கவே யுரைத்திடுதல் வேண்டாமிதற் குத்...

இருகாதைப் பிள்ளை சங்கென்றால் - யிதற்கு
யிணங்காது பணிபூண்டி ருப்பதால் நன்றால்
உருபவளத் துண்டென்பர் அதரம் - அதனை
உன்னிடில் வெளுப்பா குழாதலாலி தரம்.

முல்லைநிகர் தந்தபந்தி யென்றால் - யதுவும்
மூடவுந் திறக்கவுங் கூடாது கன்றால்
மாங்கனியை யிருபிளவாய் - வெட்டினாற்போல்
தாழ்வாயை நான்சொலேன் அளவாய்.

கன்னியிளங் கழுத்தினைக் கழுகாய் - மொழியக்
கட்டாது தொனியிதில் காணலாற் பெரிதால்
உன்னிவளர் மூங்கிலினைத் தோளை - உரைக்கு
ஒருபோதுந் சரியில்லை உன்னுவதுங் கோழை.

யாழ்க்கு நிகரென்பார்கள் கையை - யானும்
அதனிலுந் துளையுண்டு அகற்றிடுதல் மெய்யை
வாள தாமரைப்பூ உள்ளங்கை - யிதனை
வகுந்திடில் விரிதல்குவிதல் அதனாற்பொய்.

வல்லைநிகர் தனமானு மென்றார் - யதுவும
வண்மையிதன் றழுக்கு வாராது வெண்றாற்
நல்லவெல்ல வட்டென் றுரைத்தால் - யதுதான்
நன்னீரிலே கரையும் மில்லைச்சிரத்தால்.

அந்தமதன் யேறேணி யென்று - உலகம்
யாவற்றுஞ் சொல்லிவிடு மனுதினமு நின்று
யிந்தமுலை சுமந்திட்ட வுரத்ததை - வந்து
ஏறுவார்க் கமைத்திட்ட ரோமவரை தரத்தை.

உண்டில்லை நூலென் பரிடையே - யிவெட்கு
ஓதுவதுங் கூடாது உருவிலிதன் படையே
கண்டுகாணாத வல்குற் சுனையோ யென்று
கவிநோர்கள் கூறுவங் காணாது யிணையே.

வாலிபரைப் பிணித்து யிருதம்பம் - மென்ன
வல்லோர்கள் சொல்லையு மறுத்து வரம் கம்பம்
ஆலித்தலை கடல் கடந்து அனுமன் முளந்தானா
மென்பரிது தாண்ட அறியாத தனுமான்.

வராலென்று கணைக்காலை யுரைத்தால் - அதுவும்
வற்றிவிடுமே யிதுவும் வாடாது சிரத்தால்
திருசு சுடரெனச் செப்பில் - கூடா
திறக்கமு மேற்றமு மில்லாதலொப் பில்.

புறவடி பந்து குதிக்கால் - விரல்கள்
அஞ்சுதலை யுள்ளதரவ மிதுவே புதிதால்
புத்தகம் பதமாய்க் கற்ற- சொல்வார்கள்
சொல்லுவது சீரில்லை யிதமாய்.

கேசாதி பாதம்பரை வருணை - வள்ளிக்
கிஞ்சுக மாங்குயிலைக் கூறினதுங் கருணை
ஈசாவெனச் சொல் நாரதருங் - கானில்
யிருக்கும் வள்ளியம் மையுடயெழில் கண்டுகதறும்.

யெங்கினுஞ் சென்று அலைந்தேனே - வள்ளி
யெழில்போலக் கண்டிலேன் யென் செய்வேன் நானே
யிங்கிவள் வடிவமதை வரைந்து - கந்த
ரிடத்தினிற் கொடுத்த வளையிணக்குவேன் அறைந்து.

யென்னவெழுதிப் படத்தை யெடுத்து - முருகர்
யிருக்குமிடங் கண்டுமவற் கைதனிற் கொடுத்து
முன்னமே கொண்ட மனையாட்டி - தனக்கு
மூன்றுபங்கு நாலுபங்கு மேல்தான் சீமாட்டி.

மிதமாக யெண்ணப் படாது - வள்ளி
மின்னாளை விட்டாலும், வேறுபெண் கிடையாது.
யிதமாகப் போய்ப் பாருஞ்சாமி - யென்று
மியம்பியே நாரதரு மேகினார் பூமி.

படத்தைப்பன் னிருகண்ணால் பார்த்து - கந்தர்
பசுந்தேனில் வீழ்யீப்போல் பதைத்து உடல்வேர்த்து
தடத்தைக் கண்டே கலென்றெழுந்த - முத்து
தையல்தெய் வானைகண்ட வரடியில் வீழ்ந்தார்.

ஏதேது மோசமாய்ப் போச்சே - யினி
யென்னநான் சொல்லுவேன் யிவடனக்கு பேச்சே
வாதே விளைத்த திந்தப்படமே - யிதனை
மறைத்து விடலாமென்று பேசல் அபகடமே.

யென்னாசை தனக்கிசைத்த மாதே - தனித்து
யிங்குவந்த சங்கர் யியம்புவையிப் போதே
உன்னாசை கொண்டுவந் தேனடியாள் - ஏயனக்கு
உள்ளவர் மஞ்சொல்ல வேணுமென்று யிளங்கொடியாள்.

நலரதன் யிங்குவந்த போதே - கலகம்
நடக்குமென்று மாறியேனா நாதாயிச் சூதே
பாரதப்போர் விழைந்தார் போலே - யாரையும்
பகை செய்வன்செய் யாட்டால் வயற்வெடிப்ப தாலே.

சூரனுக்கு முமக்கும் பகைசெய்தான் - அதனால்
சுகமுண்டா பட்டிதான் ஆறுநாள் மெய்தான்
தீரனுயிர் வாங்க யிருந்த - அந்த
தேட்டாளன் பேச்சையும் நீர்கேட்கு மறந்தீரோ.

அண்ணர் தந்திமுகவரை யிள்ளத்து - மாய்கை
அடித்துடை தட்டச்செனித்த அசுரர்களை வதைத்து
எண்ணமுடியாப் படையை நொறுக்கி - அல்குல்
யிடைசெலுத்தி யமுர்த கலசத்தினை யறுக்கி.

பிடித்தவவை நொறுக்கிய போதே - உள்ள
பிலமர யிடப்பாகம் பெற்றதுவு மாதே
அடிக்கடி பிழைத்து வந்தசிங்கன் - றன்னை
அதஞ்செய்ய நீர்பட்ட பாடென்ன வங்கன்.

ஈதெல்லாம் யானறிந் திருக்க - சாமி
யென்னை நீர்யேய்த்திட வுமக்கு மனதுருக்க
வாதெல்லாம் யென்முன் செய்யாதீர் - கையில்
வைத்து யென்னமோ பார்த்தீர் வகைகேட்டேன்.

யென்னதந்து போனானோ பாவி - யெனக்கு
யிடையூறாய்த் தோணுகிது யிசைப்பீ ரென்னாவி
முன்னமே தந்தை தேவேந்திரன் - சொன்ன
மொழிதவறி நடந்தீரே நீரே குபேந்திரன்.

யேதேது தெய்வானை மின்னே - வஞ்சம்
யெள்ளளவு நினையாதே யெழுந்து நடயின்னே
வாதேது வுத்தன்பா லெனுக்கு - யாரோ
வஞ்சகமாய்ச் சொல்லக் கேட்டாயோ வுனக்கு.

மேலான குலத்திலே பிறந்தாய் - நீயும்
மெல்லியர் கட்கெல்லா மரசாகச் சிறந்தாய்
ஏலாதுநீ சொன்ன சூது - அதுவு
மென்னிடத்தி லணுவேணு மிருக்காது தீது.

உட்நதன் மனைக்கேகி விடுபெண்ணே - அங்கு
உண்மையடியார்கள் யின்றே வருவாரென் கண்ணே
அந்தவுரை மெய்யென்று கேட்டுத் - தெய்வ
யானையுஞ் சென்றாளே யவளிடுக்கும் மாட்டு.

## விருத்தம்

யிந்த விதமாய்ச் சொல்லித் தெய்வானை
தாயேகினாள் யெந்தை கந்தரிது நன்றென்றே
அந்த விருளிர் மயில்மே லேறி
ஆங்காரச் சத்தி வேலனைத் தேமார்பிற்.

செந்தமனை யாட்டியிடந் செல்லுமா போலச்
சுந்தரவள் ளித்தாயின் சூழல் தேடி
வந்தனஞ் செய்தே நாடி வந்தாரந்த
வழிகண்டார் மொழிகேட்டு மருள்கொண் டாரே.

இந்தவடி வோடங்கு சென்றால் - அங்கு
யிருக்கும் வள்ளியைப் பார்க்கயிசையாது நன்றாய்
கந்தர்வன வேடர்வுகு வெடுத்தார் - அதனைக்
கண்டிடும் அன்பர்மனங் களித்திடவுந் தொடுத்தார்.

காலில் தொடுசெருப் பணிந்தார் - கழலில்
கவினாக விருதுவெண்ட யங்கட்டத் துணிந்தார்
நூலிடையில் ஒட்டுச் சல்லடமும் - யிறுக
நுணுக்கமாங் கருங்கச்சை கட்டி நல்லதிடமும்.

உருக்குச் சிராவங் கிதரித்துக் - கையில்
உண்டையொடு சுண்டுவில் கொண்டு மிகத்தெரித்து
கருக்கம் பரத்தூணி கட்டி - கழுத்தில்
கண்டிசரப் பணிபதக்கன் கல்லமுத்துங் கெட்டி.

இரண்டு கையுமே தங்கத்தோடா - புனைந்து
யெழில் சந்திர முகத்திற்கு யிட்டநீர்க் கோடால்
மிரண்டுமிரண்டே பார்க்கும் நோக்கார் - காதின்
மேற்சந்திர முருகு மிகச்சொலிக்குந் தூக்கார்.

நெற்றிதனில் வீரபட்டந் தரித்து - குஞ்சி
நேராகவே முடிந்து தமையரைச் சரித்து
வெற்றித்தரவே வேண்டு மண்ணே - யென்று
வேல்முருகர் வேடவுரு வேயெடுத்து நின்னே.

யினியென்ன யோசனை யென்று - பரணுக்
கெதிராக மான்தேடி யிளைத்தவர் போல்நின்று
தனியாக வழிதப்பி வந்தேன் - மானுந்
தான்சென்ற வழியெனக்குத் தான்கொல்லு செந்தேன்.

அமுதத்திலே செனித்த அனுமே - வேடன்
அரற்றுவது கேட்கலையா ஆயிளா யினமே
சமுகத்திலே நின்று கெஞ்சிக் - கெட்டால்த்
தான்சொலா தென்னதான் தையல் நீமிஞ்சி.

வருகுதோ நான் மனிதன்தானே - உனக்கு
வாட்டமென்ன பேசுதற்க தேட்டமென்ன தேனே
உருகுதே யெந்தனு நெஞ்சம் - நீதான்
ஒருவார்த்தை சொன்னாக் காலுமக்கு யான்தஞ்சம்.

ஏளைக் கிரங்காத நெஞ்சா - வந்து
இலவு காத்திட்ட கிளிக்கேற் காதபஞ்சா
நாளைத் தானிங்கு வருவேனா - மனது
நெதிலையா ஐந்தருவே செந்திரு நீதானா.

ஐவிரலி தன்னிலொழிந் தார்க்கும் - முன்னின்
றவரை வெளியாக்க வந்தவணங்குமே தோற்கும்
மெய்விரத அல்லமத் தேவை - மயக்க
மேதினியிலே செனித்த மனமாய் கைபூவை.

பெரியமா முனியினை வதைக்க - அன்று
யெதிர்வந்த மோகினியே யேன்னுயிர் பதைக்க
அரியமா தவங்கள் செய்தேனோ - உனைக்கண்டும்
அப்பாலே செல்வெனோ அல்ல வழி நானோ

போறவ னானல்ல - நீதான்
சணத்திலே ஒருவார்த்தை சொல்லு வெல்ல
பச்சிலை களுண்டெனது கையில் - தடவிப்
பார்த்திட்டால் தெரியுங்காண் பந்தொடியுன்மெய்யில்

தாய்தந்தை பேரேது சொல்லு - உன்தன்
தன்னுடன் பிறந்தார்கள் தகமை சொல்லிதில்லு
பேய்போலத் தனிவனத்தில் நின்றாய் - வைத்த
பேரென்ன ஊரென்னப்பிசகின்றி நன்றாய்

ஓதென்று வனவேடன் நெருக்கப்ப - பரண்மேல்
உறைந்தவள்ளி யம்மையும் எறுத்துமனம் வெறுக்க
சூதென்றாய் பேசவந்தாய் வேடா - நீதான்
சுருக்காக ஓடிவிடு சொன்னேன்நீ போடா

வனத்திலே திரிந்த முழுமூடா - யிங்கு
வழிதவறி வந்தனென்றாய் மதியுனக்குக்கேடா
யினத்திலே சேரும்வகைபாரு - யண்ணா
யிங்குவரு முன்னேகு யெரிப்பர்திருநீறு

## விருத்தம்

யென்னுவள்ளி யேசம்போ தண்ணன் மார்கள்
யெரிகண்ட மெழுகதுபோல் யிளகி நெஞ்சம்
ஒன்றுபடவும் பலவாய்ப் பேசிக் கெண்டு
யுயர்வேட்டை நாய்கள் பலவுடன்கைக் கொண்டு

சென்று வள்ளியம்மன் யிருக்கையினிற் செல்லச்
சீக்கிரமே வேங்கைமரமானார் வேடர்
யின்றுயிதை வெட்டவென்று யெழுந்தார் அண்ணர்
யிளங்கொடி யாளும் விலக்கி யியம்புவாளே

யிதுநல்ல நிமுலாச்சு தண்ணே - யென்னும்
யிங்கே யிருக்கட்டும் யினைப்பகற்று மின்னே
மதுமா மிசங்களுண்ட களைப்பை - யெளிதில்
மாற்றிவிடும் கண்குளிருஞ் சாற்றினே றளிர்ப்பை

யீதையிளையாள் சொல்லக் கேட்டு - தமையர்
ஏகினார் சிற்றூர்க்கு யெழிலான ரோட்டு
சூதையே யறிந்து வனவேடர் - யிதனால்
சுகமில்லை பண்டாரச் சுத்தவுருக் கீடார்

யெண்ணுக் கடங்காது வயதாய்க் - தந்தர்
யெழிலுள்ள மேனிவற்றி யினளப்புங் களைப்புளவாய்
கண்ணுக் கடங்காவிபூதி - அய்யன்
கழுத்தில்கண் டிகைமுன்முன்னூல் கைமணிகள் ஆதி

கபடிவயிடை தண்டு கமண்டலமும் - தந்தர்
கட்டுசடை நிகராமோ கனமதி விண்டலமும்
ஆவி யுடையார் தொண்ட ரிடமும் - கானில்
அன்னநடை பின்னலிட யடிபெயர்க்குந் திடமும்

பண்டுள்ள வேலொன்றை யெடுத்து - வள்ளி
பரண்நோக்கி நடந்து அருகாக வடுத்துக்
கண்டுதோட்கிட்டு மடியவற்கே - யிந்தக்
கானவள்ளி செய்தவசு காணாது மெவற்கே.

தள்ளாடித் தடுமாறி வீழ்ந்து - நாவால்
சத்திசிவ சங்கரா சண்முகவென்று தாழ்ந்து
உள்ளாசை வெளிக்கிக் காட்டாமல் - அய்யன்
உருமாறிச் செய்திறத்தை யோவதற்கு நாட்டாமல்.

உச்சியுரு மன்னனேர வேளை - தன்னில்
ஒருதுணை யுமில்லாமல் உயிர்போகு நாளை
பச்சியும் பறவாத வெய்யில் - யதனில்
பாதைவழி காணாது பரதவித்து மெய்யில்

வேர்வை கலகலவென்று வடிய - காலில்
வெட்டுக் கட்டையுமிடற வேலர்முன் னொடிய
பார்வை தோயாமல் மடுவீழ்ந்து - கல்லும்
பலமாக உறுத்தவும் படுகாயத் தாழ்ந்து.

அய்யய்யோ யுயிர்போகு தில்லை - பழனி
யாண்டவரைத் தெரிசிக்கப் போம்பாதை தொல்லை
குய்யோமுறை யோவென் றழுது - வானத்தில்
கூச்சலதுதான் போடவேடர் கண்டு தொழுது.

வள்ளிக்கு மூத்தண்ணர் யெழுவர் - கானில்
வந்தபரதேசி யுடவடி கண்டு தொழுவார்
வள்ளிமலைச் சாரலிந்த வருகே - சாமி
வேடர்வர அஞ்சுவர்கள் பயமிகுதி குருகேல்.

யெங்கள்குல தெய்வம்போல் நீர்தான் - வரக்காண
யென்னதவஞ் செய்தோமோ முன்னமே சீர்தான்
மங்களகல் யாணகுண வேலர் - கிருபை
வைத்தின்று வந்ததுபோல் வந்தீரே சீலர்.

வாருமெங்கள் தங்கையிடந் தன்னில் - பண்பாய்
வைத்துக்காப் பாற்றுவாள் யெங்கள்சொல் முன்னில்
சீருஞ் சிலாக்கிய முமக்குண்டு - யெங்கள்
தெய்வம்போல் வந்தீரே வாரு நலனுண்டு.

யென் று சொல்லித் தானழைத்து வந்து - தங்கை
யிடங்கொடுத்து பசிதீருமென்று சொல்லு வந்து
யின்றுமுத லிவர்செல்லும் வரையே - பாதுகாத்
திடுவென்றார் சிரியென்றார் அண்ணன் தம்முறையே.

தங்கையே நீபதன மென்று - சொல்லித்
தான் சென்றார் தமையன்மார் தங்கள் பதியென்று
கொங்கையை சுமந்திட்ட மின்னாள் - அங்கு
கூசாமலே வந்து கும்பிட்டுச் சொன்னார்.

சாமியுங் களூர்பேரு மென்ன - அடியாள்
சாற்றுமொழிக்குத் தாரந்தான் சொல்வீ ருன்ன
பூமிதனிலே பாண்டிய தேசம் - யாமும்
புண்ணியதலமாம் பழனி தன்னிலே வாசம்.

அங்கிருந்து மற்றஐந்து தலமுஞ் - செல்
ஆயிழாயிங்கு வந்தேன் ஆசையால் நலமும்
இங்கிருந்து திருப்பரங் குன்றந்தான் - காதம்
யெத்தனமிருக் குஞ்சொல் யெயிதிவர நான்தான்.

அதில்நின்று திருச்செந்தூர் செல்ல - மார்க்கம்
அறிந்திருந் தாற்சொல்லு அத்தலமும் நல்ல
கதிகொடுக்கு மென்றுநல்லர் சொன்னார் - அதனைக்
கண்டபின் சோலைமலை காணலா மென்னார்.

ஏரகத்தல மொன்று கண்டால் - செனனம்
யெடுக்காமல் சீவன்முத்தி யெய்திடுவ துண்டால்
பாரகத்தி லுள்ளகுன் றெல்லாம் - அடுமை
பணிந்துவர ஆசைகொண்டேன் பாதைவரக் கல்லாம்.

இதுபோல வுன்மனது தானோ - அல்ல
திளக்கமா யிருக்குமோ யினமறியே னானோ
சதுர்நாலு கங்களையுங் கண்டேன - உனைப்போல்
சஞ்சரிக்கக் கண்டிலேன் பஞ்சையோ தொண்டன்.

ஆதரித்துப் பாது காரம்மா - உனக்கு
அருமையெனை யன்வைத்து ஆளுவீர் சும்மா
வேதவித்தாய் வந்து முளைத்தாய் - நான்கண்டும்
விட்டுச்சும்மா போகேன் வீனிலெங் கழைத்தாய்.

உங்களுட குலமென்ன தோகாய் - அதனை
உள்ளபடி சொல்லுவா யெந்தனக்கு வாகாய்
பங்கமித னாலுண்டோ மயிலே - நீயும்
பரண்மீதி லேயிருக்கப் படுமோமாங் குயிலே.

பன்னிரண்டு வயதுதா னிருக்கும் - தக்க
பருவங்களாகி னாய்பார்த் தென்மன துருக்கம்
அன்னியாயம் நீதனி யிருக்கக் - கண்டும்
அகலுவேனோ யணுவேனு மெமனம் பொவக்கப்

போதுமதன் பஞ்ச பாணம் - ஐந்தும்
போட்டுக்கொளுத் துவதால் போச்சுதெயென் நாணம்
நோகாதா வுந்தனிரு பாதம் - பரணை
நோக்கலாமா சொல்லு வாயே அன்னீதம்

மஞ்சைபழித் திட்ட குழலாய் - யெனது
மார்பைத் துளைக்குதக் கினியாணச் சுழலாய்
பஞ்சையைப் போல்நின்று ஒனைக்கெஞ்ச - யெனதுமுகம்
பார்த்திருக் கின்றாயோ பாத்தின் னஞ்ச

வஞ்சந் செய்யாதே செந்திருவே - யிதுநல்ல
மார்க்கமல்ல யெந்தன் முகம்பாரு ஐந்தருவே
அஞ்சலென் றொருவார்த்தை சொல்லு - முகசந்திர
அன்னமேயான் சொன்ன வழிக்கேட்டு நில்லு

அன்னநடை மின்னலிடை யாளே - கன்னல்
அமுதப் பசுங்கிளி பாவாடையுடை யாளே
சொன்னத்தாற் செய்தனத்தின் மேலே - தேமல்
சொலிக்குதேவலை ரவிக்கைத் தோற்றமது நாளே

ஆசையைத்தீர்க்கும் அல்குல் மேல்தான் - மேக
லாபரண மொட்டியாண மதுமறைப்ப தால்தான்
பாசைவைப் பேனென்சீவன் நிலைத்து - யிந்த
பரண்அருகு நிற்கிறேன் பாருமுகம் அலைந்து

இருகாதும் கேளாத செவிடா - யுந்தன்
இரண்டுகண்ணு மெனப்பார்க்க விழித்திட்ட குருடா
அருகாகத் தானும் வாராயா - முதற்சாதி
ஆனதால் நல்லமணம் வீசுது பாராயா

யிவள்பது மினிச்சாதிப் பெண்ணாள் - தானென்
றெண்ணுகிறேன் கொக்கோகத் தியற்கையுள்ள கண்ணாள்
பவளமதரம் முத்தே பல்லாள் - யென்னைப்
பாராள் வாராள் ஆசைதீராளோ கல்லாள்

கொஞ்சவயது துள்ளபெண் தானே - உலகக்
கொள்கையறியாக் கொம்பில் கூட்டிவைத்த தேனே
மிஞ்சவில்லை யான்கண்டுங் கொண்டேன் - யினித்தான்
விடுவேனோ யுலகத்தில் யான்தானே யுண்டேன்

யென்னதானே திடங் கொண்டு - வள்ளி
யிணங்காதும் வணங்காது மிசைக்காதுங் கண்டு
உன்ன யாசை யுண்டாகி - கவடம்
உள்ளதனை காட்ட வென்று - கொண்டபோகி

பாசாங்கு செய்தவிதஞ் சொல்வேன் - யாரும்
பாருங்கள் வாருங்கள் கூறுங்கள் வெல்வேன்
வாசாம கோசரம் தாக - பசிதான்
வந்ததுபோல் கூச்சலிட்டு வாதையுற்றார் நோக

உயிர்தானும் போகுதடி வள்ளி - உன்னை
உண்மையென்று நம்பினேன் அண்ணர்சொல்லைத் தள்ளி
வளிரமன தாயிருக் கிறாயே - யெனக்கே
வயதுமெத்த ஆச்சுப்பசி தாங்கலை வாவியே

உன்னைவிட்டு யென்பழி போகாது - மெத்த
ஒடுங்கினது கால்கைகள் நடுங்கினது காது
முன்னையெனக் களந்திட்ட நானும் - யின்று
முடிவாகி விட்டது மாதரசே கேளும்

சீவன்போம் முன்னாடித் தானே - ஆதரந்
செய்தென்னைக் காப்பாற்றுந் தெள்ளமுத மானே
காவனத்தைக் காத்திருந்த வென்தாய் - சொந்த
யழல வித்து கடிதிடித்து தந்தாய்

தேக்கிலையினாற் றொன்னை தைத்துத் - தேனுந்
தினைமாவுமே பிசைந்து தேசிகர்முன் வைத்து
வாக்கினாலுங் கனிவாய்ப் பேசி - யிதையுண்டு
மாற்றிவிடும் பசியென்று வள்ளியுடல் கூசி

அடுத்துமே யங்கவள் யிருக்க - யிவரும்
ஆவலாய் அள்ளியுண்டு தொண்டையினைச் சுருக்க
கொடுத்தவிரு கண்ணிரண்டுஞ் சுற்ற - மயக்கங்
கொண்டுதடு மாறியவர் கூவென்று கற்ற

யென்சீவன் போகுதடி வள்ளி - மாவென்
தென்னமோ நஞ்சுதனை யீந்தாயடி கள்ளி
முன்பின்னு முனக்கெனக்கும் பகையோ - கொல்ல
முடிவின்று பார்த்தாயோ யிதுநல்ல முறையோ

தண்ணியாவது கொஞ்சந் தாடி - சீவன்
தான்போகு முன்னாக யென்னண்டை வாடி
யெண்ணிய தலங்கள் வெகுகோடி - செல்லுமுன்
யென்சீவன் போகுதடி யின்றுன் கைநாடி

தொட்டாலே யான்பிழைத் திடுவேன் - அல்லநீ
தோற்ற போலிருந்தால் சீவனிங்கு விடுவேன்
கட்டாய மானதிந்தச் சேதி - நன்றாய்க்
கவனித்துப் பாரடி நீகுறச் சாதி

சாதிக்கித் தக்கபுத்தி தானே - அதிகந்
தானவர் சொன்னாலுமே தக்காது மானே
சேதிக்கி வதிற்சேதி சொல்லு - யெந்தன்
சித்தங் கலங்குதடி மெத்தமனங் கல்லு

செத்ததார் பிழைத்திடுவ துண்டா - அடியே
சீமாட்டி இட்டத்திற்கு செலந்தானுங் கொண்டா
கொத்தார் குழலணங்கு மாதே - யென்னைக்
கூட்டிப்போய் சலங்காட்டு வாயேயிப்போதே

யென்றுசொன்ன பழிதனக் கஞ்சி - வள்ளி
யென்பின்னால் வாருமென்று யேகினாள் மிஞ்சி
யின்று சன்னாசிநம தெண்ணம் - முடிந்து
தென்றெண்ணி வள்ளி பின்னேகினார் திண்ணம்

கொண்டு குதிங்காலினில் மிதிக்குங் - வேகங்
கொண்டுதுடர்ந்தே நெருக்கிக் கூசாமல் மிதிக்கும்
கண்டுநிகரான மொழியாளே - செலத்தைக்
கடிதாகக் காட்டிவிடு வண்டு விழியாளே

கிட்டத்திற் சோனைஒன்றைக் காட்ட - அய்யன்
கிடுகிடு பாதாளமிது வென்றுகையை ஆட்ட
யெட்டத்திற் போகவேணும் அய்யா - யென்னால்
யிணங்காது பிணங்காம லிதிலிறங்குந் துய்யா

பாளுஞ் சனைதேடி யென்னைக் - கொல்லப்
பார்த்தாயோ பழிகாரபவஞ் சுற்று முன்னை
வாழும் பருவமடி பெண்ணே - மாள
வகைதானெனைச் செய்நாய் கேளடியென் கண்ணே

யிவ்வனத்தில் ஒண்டியாய்த் தானே - பரண்மீ
திருக்கிறாய் மிருகபய மில்லாமல் தேனே
செவ்வையா யெந்தனக்குச் சொல்லு - வள்ளித்
தெய்வமே யென்றுசொல்லி வழிமறித்து நில்லு

மாதரசே யென்று கந்தசாமி - அங்கு
வணக்கமாய்க் கேட்கின்றார் வள்ளிதனைக் காமி
ஆதரவு யென்னவுனக் கிங்கே - வள்ளி
அன்னமே சொன்னமே யானறிவ தெங்கே

இந்த வடிவமேது வுனக்கு - வந்த
யியல்புதனைச் சொல்லிவிடு வாய்நீ யெனக்கு
வந்த கிழவன்கேட்க வள்ளி - யம்மை
வந்ததும் வளர்ந்ததும் வகையாகத் தெள்ளி

ஆதியில் ... வமுனிவன் - மாயனை
அன்று சிவமுனியா கென்றளிந்த சாபம்பின்
சோதியிந்த வள்ளிமலை சென்றார் - அந்தச்
சுந்திரி யிலக்குமிளாள் மானாகி நின்றாள்.

அன்று மாரீசன்கொள் வடிவு - அதற்கும்
அழகான வுருவெடுத் தங்கனே விடிவு
யென்றுவந்த பெண்மானைப் போலே - கண்ட
தில்லையென்று மோகித்தவுடன் கெற்பத் தாலே

பத்துமாதமுந் சுமந்து திரிந்து - அதுவும்
பார்த்துவள்ளிக் கிழங்கெடுத்த பள்ளித்திற் பிரிந்து
முத்துச்சிப்பியிடம் பிறந்தாற் போலே - மான்பரல்
மொய்குழல் வள்ளிக்குயிலு முன்பிறந்த தாலே

பார்த்துமுகம் வேர்த்துஅந்த மான்தான் - தீண்டப்
பயமாகி யகலும்பின் பரிவாலே தான்தான்
சேத்துக் கயினமல்ல வென்று - பெற்ற
திறத்தாலே வரும்திகைக்கும் திரும்பிச் சென்று

கானகத்துக் கதுநாடிச் செல்ல - வனத்துக்
கதிபன் நம்பிராசன் கடவுளிடம் நல்ல
வானகத்து மின்னை நிகராக - ஒருபெண்
வந்தெனக்குத் தந்தருளென்றே வனத்திற் போக

அங்குவள்ளி கிழங்குழி தன்னில் - கூவி
அழுகுரல் கேட்டுநம்பி ஆவல்கொண்டு உன்னில்
யிங்குஒரு பல்லாங்குக் குள்ளே - சத்தம்
யெந்தனக்கு கேட்கிறது யிவே... பிள்ளை

யென்னவிரை வாயோடிக் கண்டு - மகிழ்ந்து
யெடுத்து வந்து குழந்தையினை யிருக்கும்மனை கொண்டு
வன்னமுகில் மனைவிகையிற் கொடுத்து - நன்றாய்
வார்த்திடுவாயென்று வந்தவகை தன்னை விடுத்து.

வள்ளியம்மை யென்றுபெயர் வைத்து - யென்னை
வளருதினைப் புனக்காவல் வைத்தார்கள் மெய்த்து
புள்ளிமயி லேறுகந்தர் துணைதான் - யெனச்சொல்லிப்
போயினார் யென்தந்தை தமையன் மார்பினைத்தான்

ஆனதைனக் கஞ்சுவனே யல்லால் - மற்ற
யாவருக்கும் பயப்படேன் யானெற்ற சொல்லால்
மானைவசப் படுத்தலா மென்றே - சிந்தை
மகிழ்வாகிச் செலங்காட்டு மாதேநீ யின்றே

வாவென்று முன்னாடி நடந்தாள் - யாவரும்
வல்லமையாய்ப் பின்னாடி வேகமாய் தொடர்ந்தார்
தாவென்று நல்லசெல மிதுதான் - யிறங்கி
தான்குடித்துக் கரையேறுஞ் சாமியிது நதிதான்

சொன்னாளே வள்ளி மின்னாளும்-யிவருஞ்
சுருக்கதனிலே யிறங்கிப் பெருக்கமுள்ள நீளும்
அன்னாளே பாசி பிடித்ததனால் - வழுக்கி
ஆழத்திலே யமுங்கி ஆரணங்கே யிதனால்

உனக்குவந்த சிலாக்கியந் தானென்ன -பெண்ணே
ஓடிவந்து தூக்கிவிடு ஓவியமே யென்ன
வனக்குறவர் கண்டெடுத்த வள்ளி - கிட்ட
வந்துமுந்தானை தரவாண்டா மென்றுதள்ளி

கைதாடி பிடித்துத் கரையேற - யென்னைக்
கசத்திலே யமுக்குதடி கருங்குயிலே கூற
மெய்தானும் நோகுமோ வுனக்குக் - கொன்று
விடவென்று கூட்டிவந்து விட்டபழி தனக்கு

அல்லவென்று நினையாதே மாதே - உன்குலம்
யாவையு மழித்துவிடும் யாயிழை செய் சூதே
நல்லதல்ல ஒன்கையைத் தாடி - பிடித்து
நானுங்கரை யேறுவேன் நங்கையே நீவாடி

யென்று சன்னாசியும் புலம்ப - நல்ல
தென்றுவள்ளி கைகொடுத்து யிளுத்துக்கரை அலம்ப
நன்றுநன்று யினியென்றுஅய்யன் - அங்கு
நடத்துகின்ற தன்மையை நாடுவீர் துய்யன்

கரைதனிலே வந்து சன்னாசி - சமையங்
கண்டுதன் தமையரைக்கடுகவரப் பேசி
நிறை தவறாது வருவீரே- யென்று
நிற்கின்ற சமையத்தில் நீளபாதை நேரே

நாலுகால் நாலுமலை யாக -மேனி
நட்சத்திர மண்டலமேல் தாவிப் போக
வாலுமே மந்திரகிரித் தாம்பாய் - கொம்பு
வடமேரு கிரிசக்கர வாளகிரிக் காம்பாய்

வெள்ளியங் கிரிசிரம தாகத் - துதிக்கை
வெல் நாக மலைநீளம் மேல்தாவிப் போக
வள்ளிமேல் கண்ணாக நாடிக் - கடுகி
வருகிறதைக் கண்டு சன்னாசி பின்னாலோடி

அபையமென்னைக் காத்தாளுஞ் சாமி - யிந்தமது
யானையென்னை நோக்கியிங்கு வருகிறதே பூமி
உபையதமே யெனக்குக் கெதிதான் -வேறு
உலகத்தி லுண்டோசொல் நீரெனக்குப் பதிதான்

சொன்ன மொழிமாறாத குலம்நான் - யிதனைச்
சுருக்காகத் துரத்திவிடும் யென்னுயிரு நீர்தாண்
அன்ன சமையமெங் களய்யன் - வள்ளி
யன்னமே வலக்கை போடடியென்று துய்யன்

கேட்டுமுன் னமேயடித்துத் கொடுத்தாள் - அய்யன்
கிட்டிவந்து யானையினை யெட்டவென்று விடுக்க
தாட்காது ஐங்கரனு மறைந்தார் - யிங்கு
தானின்ற சன்னாசி தன்மையில் சிறந்தார்

ஆறுமுகம் பன்னிரண்டு கையும் - தோன்ற
வலங்காரத் திருமேனி அளகுர்பதோன்ற
ஏறுமயில் வாகனங் குடமுந் - தோன்ற
யெழில் கடப்பமாலை புயத்திலிலங்கித் தோன்ற

நீறுகண்டி பதக்கன் நெஞ்சில் - தோன்ற
நேராரை வென்றவை வேல்நேரில் தோன்ற
மாறுமாறாய்ப் புனைந்தமுன்னூல் தோன்ற - தையல்
வள்ளித்தாய் களிக்க தான் நின்றாரே

யென்னிரண்டு கண்கள்செய்த பலன்தான் - சாமி
யின்றுதான் கிட்டினதுயென்று வள்ளி நலந்தான்
முன்னுமக் கேயடுமை தானாச்சே - யானும்
முருகேசர் மனைவியென்ற பேராசிப் போச்சே

யின்றுகண்ட வடிவத்தைச் சொல்ல - யெனக்கு
யிசையுமோ யிசையாதோ யெடுத்துரைக்கு நல்ல
தென்று வரந்தர வேணுமைய்யா - யெனை
யென்தேகம் படப்படப்புச் செய்வதென்ன துய்யா

அடியார்கள் நினைத்துவர மெல்லாம் - முடிய
யனுக்கிரகஞ் செய்வதுவே அய்யனுட சொல்லாம்
கொடியார்கள் யிடத்தனு காத்துரையே - யென்னைக்
கொண்டு ரெட்சித் தென்றுங்கூடுவது முறையே

யென்றுயவர் பாதத்தில் பணிந்தாள் - கந்தர்
யிடந்தன்னிலே பேச அன்றுமனந் துணிந்தாள்
ஒன்றுந் தோன்றாமலே களைந்தாள் - மதனம்பு
ஓயாது பொழிவதால் உடலமே யிளைத்தாள்

அரகரா சத்த வடிவேலா - வாலை
அம்பிகை பராசத்தி யருளுங் குணசீலா
புரமெரித்திட்ட சிவன் பாலா - யெந்தன்
புண்ணியத்தால் வந்த மயிலேறும் லோலா

அரன்கண்ணில் ஆறுஅனல் கொழுந்தாய் - உதித்து
அன்றுசுர வனந்தனிலே ஆறுருவாய் வளர்ந்தாய்
சிரமாறு கைகள் பனிரெண்டாய் - வந்து
செனித்து விளையாட வந்ததெய்வ மிது கண்டாய்

கார்த்திகைப் பெண்அறுவர் பால்குடித்து - வளர்ந்து
கண்டுதொழாச் சூரர்படை களையுமே மடித்து
கீர்த்திமிகு தேவேந்திரன் யீன்ற - வந்த
கிளிமொழி தெய்வானைதனை யாவருக்குந் தோன்ற

மணமாலை தரித்திட்ட துரையே - யெந்தன்
மனமகிழ யின்று நல்லவார்த்தை தானுரையே
குணமாகவே கூடிக் கொஞ்சி - யெங்கள்
குலுமுழுது மடிமையாய்க் கொள்ளுமென்று கெஞ்சி

நிற்கின்ற போதில் முருகேசன் - உந்தன்
நெஞ்சின் நினைவின்படி யென்றார் ரமரேசன்
கற்கண்டு நிகரில்ல மொழியாள் - யெங்கள்
கந்தரை யிணக்கினு ழகயல் போன்ற விழியாள்

அப்போது கையிரண்டும் பிடித்து - வள்ளி
யம்மையே யுன்றன்னை யனைந்திடுவே நடித்து
எப்போது முன்னை மறவேனடி - யென்று
யிறுகப் பன்னிரு கையாலெடுத் தனைத்தாண்டி

அவ்விடத்தில் பூப்பந் தலாச்சு - கட்டில்
அதன்மேலும் அம்மிசுகத் தூளிமஞ்ச மாச்சு
யெவ்விடத்துங் கண்டதுங் கேட்டில்லை - அதனில்
யேறியிரு பேருமா யிருந்தசுகச் சொல்லை

என்வாக்கால் சொல்லவு நாவில்லை - யேனென்னில்
யென்தந்தை யென்தாய ணங்கு நிலமுல்லை
தன்னாசை கொண்டமட்டுங் கூடி - அய்யன்
தனியாக வனத்தில்விட்டுத் தன்பழனி தேடி

மயக்கத்தா லிவள்துயின்ற போதே - கந்தர்
மயிலின் மீதேறியே போனதுமோர் சூதே
தயக்கங் கொண்டெமைத் தேடுகிறாளோ - அல்லது
தெளிவாக்கிக் காவலுக்குச் சென்று விடுவாளோ

பார்ப்போ மென்றே ஓடிவிட்டார் - யென்றால்
பதறியே கண்விழித்துப் பார்த்துச் சத்தம்போட்டாள்
வேர்ப்பாள் களைப்பாள் பின்வீழ்வாள் - உம்மை
விரும்பவில்லை லீலைசெய்த விதமென்று தேர்வாள்

இருப்பாள் தளிக்கரத்தை நெறிப்பாள் - பதறி
யேங்குவாள் தூங்குவாள் வீங்குவளெக் களிப்பாள்
ஒறுப்பாள் சிரிப்பாள் பின்அழுவாள் - அவ்விடம்
விட்டோடுவாள் தேடுவாளாய் வேனோ வென்பாள்

பழியாகி விட்டதே யென்பாள் - ஆவி
பதறுவாள் கைகாலை யுதறுவாள் விளிப்பாள்
வழியில் போவோ ரொருவரிலையே - காட்டு
மான்களே குயில்களே மயில்களே நிலையே

ஒருவார்த்தை யான்சொல்வேன் கேட்டுக் - கந்தர்பால்
ஓடிவள்ளி வாடுகிறாள் கூடுமவள் கூட்டு
மறுவார்த்தை யவர்சொல்லக் கேட்டு - யெனக்கு
வந்துவதிற் சொல்லுவீர் மடந்தையென் மாட்டு

மலர்த்தேனை யுண்டபொறி வண்டே - முருகர்
வனத்தி லெனைத்தணித்து விட்டுமசக்கிச் சென்றதுண்டே
பலர்க்கு மென்ந்தான்சேதி தோணாமல் - வேலர்
பால்சென்று காதில்மெல்லப் பகருவீர் நாணாமல்

ஆறுமலை குடியிருப்ப னென்றார் - பின்னும்
அல்லா தனேகமலை யாம்வசிப்ப மென்றார்
தேறுதலை ஒன்று மாகலையே - யெங்கு
தேடியவனாக காண்பேன் சீவனும் போகலையே

அங்கனே யிவள்மயங்கித் துடிக்க - மயிலில்
அன்றுவந்த வேலவரும் யெந்தன்கை பிடிக்க
யெங்கனே ஓடிஒளிந் திட்டீர் - யடியாள்
யென்னவிதமாய்ச் சகிப்பேன் யென்றுகை விட்டீர்

கொக்கோக முறைப்படிக்கித் தானே - தப்பாது
கூடியுனை யணைந்திடுவேன் கோவையிதழ்த் தேனே
யெக்காலு முன்னைவிட்டுப் பிரியேன் - வள்ளி
யென்றவளை யவ்வனத்தி லிணங்கும் விதங்குறியேன்

இடைவிடாமற் கூடிக் கலந்து - அங்கு
இருக்கின்ற வேளையினில் தோழியர் கண்டலந்து
தடைப்பட்ட சர்ப்பமென மயங்கி - வந்து
தாதியர்கள் தந்தை பிலத்தான் சொஸத்தியங்கி

வந்தவழியே மாறி ஓடிச் - சிற்றூர்
வந்து நம்பிராசனிடம் மகள்செய்த குற்றங்கோடி
யெந்தவிதம் வாயெடுத்துச் சொல்வோம் - சாமி
யெங்களா லாகாது தங்கள்சித்தம் வெல்வோம்

வாருமுங்கள் சாமியந்தச் சாமி - தானே
வள்ளியென்ற நாயகியை மயக்கியந்தக் காமி
ஆறுநதி சோலையுந் தியானம் - எங்கும்
அவர்சேரா விடங்களில்லை யாங்கள் மத்தியானம்

கண்டிங்கு ஓடிவந்து சொன்னோம் - உங்கள்
கருத்தெங்கள் பாக்கியம் காவலனே சின்னோம்
வண்டிருக்குங் கூந்தலள காளைக் - கொண்டு
வரவேண்டும் படையெடுத்து வாருமிந்த வேளை

## விருத்தம்

என்றவர் சொல்லிச் செல்ல
        யேந்தலாம் நம்பி ராசன்
நின்றவர் தம்மை நோக்கி
        கீர்படை யோடுஞ் செல்மின்

யின்றவள் யெ[illegible]ழ மெந்தன்
        னியற்கையின் திறமுங் காட்டிக்
கொன்றவ னுயிரை யின்னே
        குடிப்பனென் றெழுந்திட் டானே

சிறுபறை கொம்பு தப்புத்
        திடுதிடு மலாரி பேரி
முறைமுறை யதிரத் தானே
        முரசுயெக் காளஞ் சின்னம்

உறுமிடி யென்ன வார்ப்ப
        ஒலித்திடக் கரிக்கொம் போசை
யெறிதிரைக் கடல் போல்சேனை
        எழுந்தன யெவரு மஞ்ச

மைந்தர் மனைவியும் பின்னாலேகச் -சொந்த
        மானகிளை கோத்திர வகைளு முன்போக
யெந்தவித நங்குலத்து பெண்ணைச் - சிறைதான்
        யெவன்வந்து யெடுத்தானோ அவனுடைய கண்ணைப்

பிடுங்காமல் விடுவேனோ வென்று - விருது
        பேசிப்படையுடன் கலந்து கானகத்திற் சென்று
கெடுங்கலம் வந்த படியாலோ - வனத்திற்
        கிளைக்கொரு வராய்த்தேடிக் கிளிமொழி தன்னாலே

வாடிவரு நம்பிராசன் முன்னே - அந்த
வள்ளியுடன் கொஞ்சிநின்ற வடிவேலர் தன்னைக்
கூடியுற வாடுவதைக் கண்டான் - அதிகக்
கோபமென் மேல்மூளக் கோடிகணை விண்டான்

கணைகள்வரும் வேகமதைக் கண்டு - யெங்கள்
கந்த குமரேசனார் கைவேலைக் கொண்டு
இணையிது களாகுமோ வெனத்தான் - கையில்
யெடுத்து வலமாய்திருப்பி யெய்தகணை தடுத்தான்

சூரியனைமேகம் வளைந்தாற் போல் - வந்து
சூழ்ந்தபடை யத்தனையுஞ் சூறையிட்டுதே வேல்
வீரியமுளார் சிலர் பிழைத்துக் - கந்த
வேளின்பால் நேரில்நின்று வில்லுகளை வளைத்து

கொட்டினார் அஸ்திரமொரு கோடி - அய்யன்
குறிப்பான் பேர்களையுங் கொன்றுவிட்டார் சாடி
முட்டிவிழுந்த வள்ளி யழுதாள் - வேலர்
முன்னாடி வந்தென்ன முறையென்றார் தொழுதாள்

யென்தந்தை தாயரையுங் கொன்றீர் - கூட
யெனக்குமுன்னாற் பிறந்த யெழுவரையுய்ய வென்றீர்
பின்வந்த படைகளையும் வதைத்தீர் - யென்னைப்
பெற்றபலன் கைமேலா யுற்றார்கள் சிதைத்தீர்

யிந்தவிதி வருமென்று மறியேன் - சாமி
யென்பொருட் டாலிவரை யெழுப்பிவிடுஞ் சிறியேன்
யெந்தனா லிவர்களிறந் திட்டா - ரென்று
யீரேழு லோகமும் யெளியவள்பேர்ப் பட்டார்

ரென்னத்தினா லென்று கேட்பார் - வள்ளி
யென்பாளைக் கந்தர் சிறையெடுக்கப் போய்மீட்பார்
ஒன்னைத்தான் அறியாத முருகன் - சத்திவேல்
ஒளிகாட்டிக் கொன்றுவிட்டார் மாலின் மருகன்

யெனைச்சுற்றாதிப் பழிதா னென்று - வள்ளி
யெடுத்துரைக்கப் பழனிமலை யெந்தைதான் அன்று
தினைப்புலத்தை காத்திருந்த பெண்ணே - உனக்காய்
சீக்கிரமெழுப்பு கிறேன்திரும்ப வென்ன கண்ணே

அவர்களே யெனையுமக்கு முன்னே - மணஞ்செய்
தனுப்பிவைக்கச் செய்கிறேன் அதைக்காண்பீர் கோனே
எவர்களையு மதியாத அவர்கள் - உமக்கே
யஷ்டபந்து ஆக்கிடுவேன் யேதுஞ்செய் யார்தவர்கள்

யெந்தன் மனதிற் குடியிருக்கும் - பழனிக்
கிறையவன நீறள்ளி யிறந்த வம்பருக்கும்
சொந்தவள்ளி யம்மைக்கும் கொடுத்தார் - அன்றோ
சுகமாக எழுந்தவர்கள் வந்ததுபோல் அடுத்தார்

தந்தைதமையன் பெற்ற தாயைக் - கண்டு
தான்பணிந்து யெழுந்து தன்கைகொண்டு வாயைச்
சிந்தை தடுமாறிப் பொத்திநின்றாள் - யெங்கள்
செல்வமகளே குற்றஞ் செப்புகிலோ மென்றார்.

மண்டலத்தோர்கள் செய்த குற்றம் - உலகாளும்
மன்னவனே தெண்டிப்பான் மன்னவன் செய்குற்றம்
அண்டர்சிறை தீர்த்தவன் தெண்டிப்பான் - அவன் செய்யின்
அக்குற்றம் மாற்றுதற்கு யாவர் கண்டிப்பான்

தேவர்க்கு தேவனு மவனே - மூன்று
தெய்வத்தின் முதலான தெய்வமு மிவனே
யாவற்குங் கிட்டாத ஆதி - தன்மீதில்
அன்புள்ள தொண்டர்பால் அணுகின்ற சோதி

யெங்களுட குலத்துக்குந் தெய்வம் - உன்னால்
யின்றளவிலே மருக ரென்றதா லுய்வம்
மங்களமாய்க் கல்யாணஞ் செய்து - அயவர்தம்
மனம்போலவே நடக்கவா ரோமலர் கொய்து

பாதத்திலே பூசை பண்ணி - யாங்கள்செய்
பாவத்தையுஞ் துலைக்க வருகிறோமென் றெண்ணி
சீதக்களப மலர் கொய்து - கந்தர்
சீரடியைக் கண்டு தொழுதேத்தியவர் பெய்து

சிரத்தின்மேற் கரங்களைக் குவித்து - சிறியோர்
செய்தபிழை தனைப்பொறுத்துக் கொள்வீர் அனுசரித்து
வரத்தினுக்கே யிங்கு வந்தோம் - யெங்கள்
வழிவந்த வள்ளிதனை உந்தமக்கே தந்தோம்

கலியாணஞ் செய்துமக்கே தாரோம் - யெங்கள்
கந்தைபெறு சிற்றூர்க்கே கடிதளைத்துப் போறோம்
சலியாம லங்குவர வேணும் - யெங்கள்
சாதிக்கிளப்பம் வருந்தப்பாது பேணும்

யென்றுகெஞ்சி யிருவரையு மழைத்து - அன்றே
யேகினார் சிற்றூர்க்கு யின்பமே விளைத்து
அன்று சொர்ணத்தால் ரெத்தின மிழைத்து -மணப்பந்தல்
அலங்காரமாய்ச் செய்து கொடுங்கையும் வழைத்து

யென்தந்தை யென்தாய் தனக்கும் - அலங்காரம்
யின்னின்ன விதஞ்செய்தா ரியம்ப மனத்துக்கும்
முன்செய்த சுகுர்தங்கள் வேணும் - சொல்ல
முனிசித்த ரானாலும் சொல்ல மனங்கோணும்

பன்னிரு குழையிற் குண்டலமும் - மேற்காதிற்
பச்சை ... முருகைப் பார்க்கும் மெண்டலமும்
சென்னியோராரில் ரெத்தின முடியே - ரெற்றி
சிறக்கவே சவ்வாது பொட்டிட்ட கெடியே

தேகமுற்றும் வீபூதிப் பூச்சே அய்யன்
திருமார்பிற் கண்டிசரப் பணிப்பதக்கன் ஆச்சே
கோகனத்தை பழித்த கையில் - தங்கக்
கொலுசு தோடாகக் காட்டுங் கோடிசூரிய வெய்யில்

அறுபதுவிரற்கும் ஒவ்வோர் விதமாய் - மோதிரம்
அதுவும் நவரத்தின மழுத்தின்தோ ரிதமாய்
நெறுநெறென வருசூரன் படையை - வென்ற
நெடியவேலுந் தெண்டும் நேராக விடையை

யெதிர்பார்த்துக் கொண்டு தானிருக்க - யெந்தை
யிடையிற் பீதாம்பரம் ஒட்டியாணஞ் சிறக்க
அதிர்வீரக் கழல்பாதத் திலங்க - விரலில்
ஆணிப்பொன்னால் மோதிரம் அழகுபெறத் துலங்க

இந்தவடிவைக் கண்ட பேர்கள் - பூவில்
இறந்தாலும் பிறவார்கள் யென்அய்யன் சீர்கள்
அந்தமுள்ள வள்ளியென் தாய்க்கே - கோலஞ்செய்
ஆபரணந்தனை வகுக்க லாகாதென் வாக்கே

பொன்மிஞ்சி மெட்டி காலாழி - கெண்டைப்
பீலிபாட கந்தண்டை பாதரசம் ஆழி
மின்னிடையில் யிழையாயிரம் பொன் - விலைபெற்ற
மென்பிளவை ஒட்டியாண மிட்டவளை தானென்

அண்ணாந் தெழுந்த தனந்தனக்கு - சருகை
அன்னமயில் குயில்கிள்ளையால் ரவுக்கை பனுக்கு
தண்ணார் முத்துடன் பவளக்கோர்வை - தங்கச்
சரப்பணி கண்டிப்பதக்கன் தகுமான சேர்வை

பவுன்மாலையுடன் கம்பிக் காரை - அழகு
படர்தேமல் முலையாட்கு பிணிகள் வெகுமேரை
யெவன்வேலை ரெற்றின நெளிதான் அடிக்கை
யினிப்புனைந்து மணிக்கட்டி லிடகாப் பொளிதான்

சிவன்மேனி மால்மேனி காட்ட - அதனோடு
சேர்கொலுசு சரிவழகி சிறந்து கையிலாட்ட
தவவேடமே கொண்ட முனியும் - ஒலியால்
தங்கள் தொழிலே விட்டுத்தவித்து மனங்கனியும்

பத்துவிரல் மோதிரங் கல்லழுத்தித் - தங்கம்
பதியவே செப்பஞ்செய் பலதினுசாய் வழுத்து
சத்தும் விலைமதிக்கக் கூடாத - விரல்மோதிரத்
தன்தினுசு வகைகூடச் சாற்றப் படாத

மூக்குத்தி புல்லாக்கு நத்து - தரித்து
முகமிலங்கு காதோலை முழுரத்தின மிழைத்து
பாக்க வொழிவான சந்திரமுருகு - அதனுடன்
பண்ணா குருடொன்னப் பூப்பளீரென்னும் மருகு

ஐங்கலச வாளிமயிர் மாட்டி - முகசரம்
அதற்குமேல் சுட்டியழகாக மேல் தீட்டி
செங்கமலக் கைவிரல் நீறணிந்து - பொட்டு
செந்தூரத் தாலிட்டுச் சீர்மையிட்டுப் பணிந்து

சந்திரப்பிறை சூரியப் பிறையும் - அதற்குமேல்
தகுந்தராக கொடிவில்லை சடைக்குஞ்ச நிரையும்
சுந்தரமிகுந்த மயிர் மாட்டி - உடனே
சொகுசான கிளிகொட்டை சொல்நாகம் பூட்டி

அன்னைக்கு அலங்காரஞ் செய்து - யெனையாளும்
அய்யனையும் மணவறையில் அருகாகப் பெய்து
யென்னையடிமை கொண்ட வள்ளல் - வள்ளியன்னை
யின் கழுத்தில் மாங்கலியமே புனைந்தார் கொள்ளல்

யென்னாளும் நீங்காத தாலி - தரித்து
யிகத்தினிலே சுகத்தை யன்பர்க்கீந்தருளும் வேலி
கண்ணாரக் கண்டபேர்க் கெல்லாம் - மோக்ஷம்
காட்டினார் பரமபத வீட்டினார் சொல்லாம்

வந்தபந்து சனங்கள் மற்றவர்க்கு - அன்னம்
வழங்கினதோர் விதஞ்சொல்ல விளங்காது யெவர்க்கும்
கந்தகிருபா கரவென் றுரைதான் - அங்கு
கந்தையுடனே பத்து நாளிருந்து முரைதான்

மலைச்சிப்போய் வருகிறேன் பெண்ணே - யன்பர்
வருந்துவார் வரவுக்கு யெதிப்பார்த்தேன் கண்ணே
நிலைத்திங்கே யிருக்கக் கூடாது - சென்று
நிமிசத்திலே வருவேன் நீயெனைத் தேடாது

தாயர் யிடத்தினி லிருப்பாய் - யாமுஞ்
சரணென்று பணிவார்க்கு தானவர்மேல் விருப்பாய்
நேயர்கள் சகோதரைப் விட்டுப் - பெண்ணே
நெடுநாளு மாச்சுதடி நினைவின்று தொட்டு

தெய்வானை மின்னாளை நினைத்து - சித்தந்
தேடியங்கு நாடுதேடி தேனே யவ்வனத்துக்கு
கைமாயக் குறத்தியரைக் கூடி - இங்கு
கட்டாய நீயிருடி போய்வாரேன் ஓடி

என்றுகந்தர் தான்சொல்ல வள்ளி - யம்மை
யெதிராக வந்துநின்று யியம்பிடுவாள் துள்ளி
ஒன்றுமறியாப் பருவத் தென்னை - நீர்தான்
ஓர்வேடனாக வந்துரைத்த மொழி தன்னை

மறந்துபோய் விட்டீரோ சாமி - நானும்
மதிமயங்கி யுமதிடத்தில் வந்திட்டேன் காமி
இறந்துபோனாற் பிழைப்ப துண்டோ - அதுபோல்
யெனையென்றும் பிரியேனென்று யிசைத்தது கற்கண்டா

தாய்தந்தை மனைவி சுற்றமில்லை - நீயே
தஞ்சமெனக் கெஞ்சினது தனைநினைக்கத் தொல்லை
ஈய்வதிரக் கந்தயவைக் காணேன் - உம்மை
எவள்பெற்று விட்டாளோ யென்பதுவுந் தோணேண்

குலங்கோத்திர மின்னதென்று மறியேன் - நல்ல
குலமானால் பொய்வசனங் கூறுவாரோ குறியேன்
பிலமற்ற பித்தர்களைப் போலே - ஒன்றும்
பேசாதிருப்ப தென்ன பிசகெந்தென் மேலே

வேங்கை மரமாகிமுன் நின்றாய் - உம்மை
வெட்டவந்த அண்ணர்களை விலக்கிவிட்டேன் சென்றாய்
காங்கைய னென்றபேர் கொண்டு - யெனக்குக்
கைவலய யிடவந்த கபடமதைக் கண்டு

சொக்கன்செட்டி மகனென்று முரைத்தாய் - குலத்தைச்
சொன்னாலும் பழிப்பாகுஞ் சூதாக வுரைத்தாய்
அக்கம்பக்கம் நீர்கேட்டுப் பாருங் - குறக்குலத்தில்
அழுக்கமே தேனுமுண்டோ சொல்லுவீர் நீரும்

வடுப்படாச் சாதியில் நீர்வந்து - கொஞ்சம்
வசைவார்த்தை தான் வைத்து மாறுகிறீர் தந்து
அடுக்காது யென்னைவிட்டுப் போக - அங்கு
நாளுமே வருகிறேன் அணைத்துக் கொண்டேக

உனக்கு பெண்டாட்டியு நானாச்சே - யெனைவிட்டு
ஒருவராய்ப் போரோமென்றீ ரிதுவென்ன பேச்சே
தமக்குத்தான் தோணா தென்ன - நீருந்
தருணத்துக் கேத்தபடி தானெனக்குச் சொன்ன

பேச்செல்லாம் வீணாகப் போச்சே - உம்மை
பிரிந்து தனியாயிருப்ப தெந்தனக்கு யேச்சே
வாச்சதாலும் முமைவிட மாட்டேன் - மூத்த
மனையாளுக் கஞ்சவில்லை வதிர் வார்த்தை கேட்டேன்

அவளைப்போல நானும்வந்தவள் தான் - உனக்கு
அதுசொந்தம் நான் அன்னிய மானவித்த சொல்நான்
இவளைத்தான் யான் மதிப்பேனா - அழகில்
யென்னிலுஞ் சிறந்தவளா யென்றுந் துதிப்பேனா

உமைத்தேடித் தெய்வானை வரட்டும் - நானவட்கு
ஒத்துக் கொடுக்கிறேன் அல்லாட்டால் விரட்டும்
யெமைத்தேடி நீர்வந்த போது - மூத்தகுடி
இருக்குதென்று சொன்னீரா யென்சிரந் தொட்டபோது

உன்தந்தை மார்க்கண்ட தமக்கு - வயது
ஒருபதுடனே யாலுமுன் டென்று யவர்க்கு
பின்அதனையே பூர்த்தி செய்து - அந்தப்
பித்தரிடத்திர் செனித்தீர் சுத்தப் பொய்பெய்து

உங்கள்குலங் கட்டுள்ள குலமோ - சாமி
உரையேது நிரையேது முறையேது நலமோ
யெங்கள் குலங் குறக்குல மானாலும் - ஒருபோதும்
யெள்ளளவும் பொய்வார்த்தை யிருக்காதி னாலும்

இதுபோல நீரிருப்பீ ரென்று - அடியாள்
யெண்ணி யும்மை நம்பினதையும் வெறுத்தீரின்று
மதுகடப்ப மாலிகா பரணா - உம்மை
மறந்துமரைச் சரணமிருக்கேன் மன்னர் பணிசரணா

## விருத்தம்

யென்றுவள்ளி நாயகியா ளியம்பும் போது
யென்தந்தையன் பழனிவரை யிருக்குந் தேவன்
நன்றுநன்று வுனைபோலக் கோடி கோடி
நல்வடிவ மெடுத்தாலும் நாடொண் ணாது

குன்றுசிற கரிந்தவன் றன்றவத்தாற் பெற்ற
குஞ்சரி தெய்வானை நிகர் கூறப்போமா
ஒன்றும் வதிற்சொல்லாதே நெடுநாளாச்சு
ஒருநொடியிற் போய்வாரே னுரை செய்வாயே

ஆயிரங்கண் ணுடையான் மகட்கு இணையாய்
யாருமில்லை மூவுலகில் யான்மொழியும் புகட்கு
ஆயிர சூரியனுந் தோற்கும் ஒளிவைக்
கயிலைமலை வீற்றிருக்குங் கடவுள்சொல்ல யேற்கும்

யிந்திராணி சந்திரமதி நிகரோ யெழிற்கு
யிணங்காது தமயந்தி திரௌபதையும் பகரோம்
சந்திரனைப் பழித்த திருமுகத்தார் யென்னைச்
சணநேரம் பிரியாத தன்மையுள்ள மனத்தாள்

விட்டுவந்து நாள்மூன்ற தாச்சே - நீயும்
வியர்த்தமாய்ச் சொல்லுகிறாய் யிதுவென்ன பேச்சே
கட்டில்லாக் குறக்குலத்துப் பெண்ணே - யின்று
கட்டாயஞ் செய்யாதே போய்வாரேன் கண்ணே

கொண்டுவிட்டுக் குலம்பழிக்க லாச்சே - உம்மைக்
குறிப்பாக நம்பினதும் உலகத்துச் கேச்சே
நண்டுதின்னும் வலைச்சி யுன்அன்னை - அதற்கு
நான்சொல்ல மாட்டேனா யெடுத்து வதிற்பின்னை

கண்ணப்பர் தின்னுதின் னென்ன - உந்தை
கையேந்தி வாங்கிப் பொசித்தன்னை யுண்ண
வண்ணநிறமான உந்தன் மாமன் - ஆயர்
மனையேல் முலாங்கள வாண்டுவதை பிட்டநேமன்

தமையனுக்குப் பெண்ணுங் கிடையாமல் -வழிக்கரையில்
தான்தங்கி யேங்குகிறார் சற்று மிசையாமல்
கமையாக யிருக்குது குலந்தான் - வெளிக்குக்
காட்டுவேன் மைத்துனரோ கண்காண தலந்தான்

பின்னுமொரு மைத்துனன் தான் வேதன் - அன்னவெறி
பிடித்துத் தனியேதிரிந்து பிதற்றுகின்ற சூதன்
யின்னுமுன் தமயனாம் வடுகன் - வஸ்திரம்
யில்லாது சுவானத்தில் யேறித்திரி முடுகன்

அரிகரத்திற் செனித்தவுந்த னண்ணன் - நாட்டிற்குடி
அல்லாமல் தானவீடதாய் இருந்த திண்ணன்
தெரியாதா உம்தந்தை சேதி - யாற்குந்
தெரியும் பலசாதியரைச் சேர்ந்திருந்த நீதி

உமக்குமுன் பிறந்த கலைமாது - ஊரில்
உற்றதலை கடைவரையில் பற்றிருக்குந் சாது
தமக்குத்தான் முறைநிறைகள் உண்டா - யெந்தச்
சாதியிலும் பெண்திருடுஞ் சமர்த்தருண்டா கொண்டா

சிறுதொண்டர் மகனையறுத்துத் துண்டு - வுந்தை
சித்தமதிற் பித்தேறிச்சோ சுடலை கண்டு
நிருத்த மவராடக் காணிலையா - அங்கு
நீலிம காளியிடம் நேர்ந்தவர் தோற்கலையா

சுந்தரர்க்காய் தேவடியாள் வீட்டில் - யீசர்
சுறுசுறுப்பாத் தூதுரைத்துத் திரியலையா நாட்டில்
முந்தப்பிரமன் முடியைக் கிள்ளிப் - பிச்சை
முன்னேற்றுத் திரியலையா அதுவிருக்கத் துள்ளிப்

பேசலாமோ குறக் குலத்தை - யிதனில்
பிசகேதுங் கண்டீரோ சொல்லுமந்தக் கலத்தை
வாசாம கோசரமாய்த் தானே - சொல்ல
வந்தீரோ பந்தையமாய் மாறுவேனா நானே

என்றுமடமாது வள்ளி சொல்ல - அன்று
என்தந்தை யாங்கந் தரிசைத்திடுவார் வெல்ல
நன்றுநன்று யின்றுன் வாயைமூடு - உந்தன்
நல்லகுலச் சங்கைகளை நாம்விரிப் போம்யீடு

சந்தைக்கடை திருவிழாக் கடையில் - சென்று
தாலிபணியைத் திருடித் தங்களுடைய யிடையில்
அந்தமுள்ள ரவுக்கைக் குளிருத்தி - ஓடுகையில்
அவர்கண்டு பிடித்தடித்து அம்மணமாய் நிறுத்தி

அடிதெண்ட மாகவடித் தாலும் - ஒன்றும்
யான்திருட வில்லை யிதையறியோ மெக்காலும்
யிடியிடித்தாற் போலச்சத்தம் போட்டுக் -கூகூவென்
றிரையும் போதே யிழத்துப் போலீசுக் கோட்டுக்

குள்ளாகக் கொண்டு போயடைத்து - சேலை
ஒருசுற்று மில்லாம லிருதுடையும் புடைத்து
கள்ளபின் சாராயங் கொடுத்து - வெறிதான்
.... யேறிப்பின் கன்னி சின்னத் தெடுத்த

நாககுலவுக்கை காந்தல் மூன்றில் -மறைத்த
நற்பணிகளை யெடுத்து நாரியரைக் கூடித்
தாக்கும்போதே மேல் விழுந்து - கட்டித்
தழுவிச் சூலாவ துங்கள் மரபுக்குக் கொழுந்து

அதுகெற் பமாகத் தானிருந்து - பிள்ளை
ஆண்பெண் ணதாய்ப் பிறந்தாவது கண்டுபரிந்து
இதுக்கென்ன வென்றுதான் கொண்டான் - முன்போல்
யிட்டத்தில் குறையாம லிருப்பது முண்டால்

கடன்வாங்க வேண்டுமென்றால் கொண்ட - சொந்தக்
கன்னியை யீடுவைத்துக் காசுவாங்கிக் கண்ட
திடமுள்ள குறவருட வழக்கம் -யெனக்குத்
தெரியுமடி தருப்புகையில் தாய்புள்ளைப் புழக்கம்

வட்டி யவனுக்கு அனுபவமே - வைத்த
வளங்கிக்குப் பிள்ளையுடன் வந்தது முன்தவமே
கெட்டிகெட்டி யீனமில்லாச் சாதி - நீயுங்
கெருவமென்ன பேசுகிரா யிதுவுங்கள் நீதி

காட்டிலே குடியிருக்குங் குறவர் - ஊர்சுத்திக்
கன்னியரைக் குறிசொல்ல விடுத்திடுந் திறவர்
நாட்டிலே திரிந்தலைந்த பெண்ணைப் - பின்னும்
நண்ணுவரோ நற்குலத்தார் வெறுத்திடு வரண்ணே

எத்தனை பேர்கட்கு விற்றாலும் - தன்னைவிட்
டேகாது குறையாமல் இருப்ப தினாலும்
சுத்தமுள்ள குலமுங்கள் குலந்தான் - வள்ளித்
தோகையிதிலே வந்து பிறந்ததே நலந்தான்

யிதைவிடப் பழிப்பு வேறுண்டா - யின்னம்
யெடுத்துனக்குச் சொல்லுவேன் யிருபிளவின் துண்டா
பதைபதைத்து யெதிர் மொழிந்தாலே - உங்கள்
பவுசெல்லாம் வெளியிட்டேன் பாவை யுந்தநாளே

காலதாமி சங்கள் செய்யாதே - அடியார்கள்
காணாது கலங்கிடுவர் காதலிவை வைய்யாதே
ஞாலமதிப்புகள் பெற்ற பெண்ணே -வள்ளி
நாயகியேயான செய்ததவத் தால் வந்த கண்ணே

வந்துன்னை யானழைத்துப் போறேன் - அதுவரையில்
மறுவார்த்தை பேசாதிருப்பை யிங்கு வாரேன்
செந்தூர மிட்ட நுதலாளே - யெந்தன்
செல்வமே யுன்னைவிட்டுச் செல்லா தென்தாளே

ஆறுதலத் துடனுமொரு தலந்தான் - எந்தன்
அன்னமே கதிர்காமம் ஆதியது நலந்தான்
.........ப்பமலர் வாசன் - அங்கு
நேசித்துப் பணிவோர்க்கு அருள்கொடுக்குந் தாசன்

....கங் காட்டானை - மிகுதி
கதி - தாலுமடியர் சென்றால் கண்ணீர் காட்டானை
......யகின்ற பேர்கள் - அங்கு
முளக்கமாயச் சென்றாலும் முன்னம் - வருஞ்சீர்கள்

...... ......ட்டமிருகங்கள் ...யெதிரில்
கடக்கும் வழியை மதித்துநிற்கும் சிங்கங்கள்
..... ..... யிவைகளுக்கு தப்பி - வேறுவழி
தெரியாது செல்லுதற்குத் தயங்கி மனதொப்பி

.... .... மிதித்தவனனைப் போலே - மயங்கித்
திரிவதல்லால் வேறுவழி தெரியாது நாலே
வகைதிப்பிப் போனே னென்சாமி - யெனக்கு
வழிவிட வேண்டுமென்று மயங்கி யந்தக்காமி

கதறிடக் கதிர்காமத் தய்யன் - உள்ளங்
கசிந்தவனுக்குக் கிரங்கி வந்துகாட்டும் வழிதய்யன்
பதறிய பேர்க்குநல்ல புத்தி - வந்ததுன்
பாதமே கெதியென்று பண்பாக நத்தி

ஐவரையும் ஒன்றாகச் செய்து - கந்தர்க்கு
அனுபயமெனக் கண்மாரி - யாகவே பெய்து
மெய்வருத்த மொன்னுந் தோன்றாமல் - சத்தி
வேலாயுதா வென்னு விளம்பக் கன்றாமல்

உரைக்கத் தன்னிருக்கையுங் காட்டி - அய்யன்
ஒருபோதும் பிறவாத நெறிதந்து சூட்டி
கரைக்கடங்காக் கருணை வெள்ளம் - அன்பர்
களிக்கும் படியாக் கொடுகின்ற வுள்ளம்

.... .... கண்டு கழிக்கும் - அத்தலம்
யெய்துமோ யெய்யாதோ யென்றெண்ணி விழிக்கும்
.... .... நின்ற குருபரனே - எங்கள்
குடிகாக்க கவிபாடக் கொடுக்கின்ற வரனே

.... உந்தன்பேர் வைத்து - அடிமை
கவிகள்பல கற்பித்து மவைதுலங்க மெய்த்து
.... ங்குளிரக் காட்டு - உமையன்றி
யெவரிடத்திற் சொல்லுவேன் யின்று நலனூட்டு

.... ....க்கு - நின் கிருபை
தோன்றவே கவிமாலை சூடிதர காக்கு
.... .... பதின்றோ - யானும்
நாடுவனோ நாடேனோ நலந்தருவே தென்றோ

அடிமை மனங்குளிர கண்பாரு - உலகில்
ஆதிதந்த சோதியே ஆறுமுகா காரு
சடிதியில் யிவ்வேழு தலஞ்சென்று - என்னைச்
சணம்பிரியா அன்பர்களைத் தான்கண்டு கொண்டு

தெய்வானைக்குஞ் சேதி சொல்லி - உன்னைத்
தீரமுடனே அழைத்துப் போரேனடி வள்ளி
பொய்வார்த்தை யென்று நினையாதே - உண்மை
பொறுத்திரு போய் வாரேன்நீயு மலையாதே

இருவென்று பழனிதனில் வந்தார் - அங்கு
யெதிர்சென்று யடியவர்கள் காணிக்கை தந்தார்
ஒருநாளு மன்பரை விட்டகலார் - யெந்தன்
உள்ளமே யவரென்றி வேறெனக்குப் புகலார்

.... .... வாவா - கதிர்காமம்
ஆளுகின்ற சோதியே அனுதினமும் வாவா
.... .... னத்தில் வாவா - வாணர்களை
யெந்நாளுங் காப்பாற்று மிறைவனே வாவா

.... .... வண்கோலா வாவா - பழனிப்பதி
வேடரூபனே பழம் பொருளே வாவா
.... .... செந்தூரா வாவா - சூரை
வமிசமிலாது வென்ற வாகையனே வாவா

.... .... மால்மருகா வாவா நித்தந்
தொழுகின்ற அடியவர்கள் துயர்நீக்க வாவா
.... வேலை விட்டால் வாவா - வேதனை
விழித்திடச் சிறையடைத்த வித்தகனே வாவா

யேரகத்துறை தேவே வாவா - யென்றைக்கும்
யென்னுள்ளங் குடியிருக்கு மிறையவனே வாவா
சூரசம் மாரனே வாவா - ஆதி
தும்பிமுகவற் கிளைய தம்பியே வாவா

வெற்றிமயில் வீரனே வாவா - சுத்தி
வேலாயுதம் பிடித்த தீரனே வாவா
பத்திபண்ணும் அன்பர்மேல் வாவா - மிதுலைப்
பதிமல்லைக் கவிராசன் பாலன்மேல் வாவா

மூதண்ட மாகவே வாவா - அடியர்
முன்னின்று கேட்டவர மொழிந்திடுக வாவா
கோதண்ட பாணிமருகா வாவா - யெங்கள்
குடிகாத்த முத்துக் குமாரனே வாவா

.... .... மீட்டவர் வாவா - அன்று
தெய்வானை மணஞ்செய்த தேவனே வாவா
.... ....வனே வாவா - ஆதி
மூலக்காரணன் மருக முத்தையா வாவா

.... தடலைத் தானே - பழனி
ஆண்டவற்கு ஆறுகால் பீடத்தில் தானே
.... செப்பு வேலூன்றிப் - பின்னும்
விளங்கு மனை யிலிருக்கும் வெள்ளிவேல் தோன்றி

.... ....காரெஞ் செய்து- தீபா
நாதனை காட்டி யெடுத்தாடி யங்கு பெய்து
கவிமாலை சாற்றிய சித்து - அங்கு
கணபதியை உச்சரித்து ஒருபானை வைத்துப்

பொங்கலிட் டிறக்கிய பின்பு - அதிக
புகழான அண்டாவில் பூர்த்தியாய் முன்பு
தங்கள் மனப்படி யரிசிகொட்டி -அளவ
தானின்றியே சமைத்துச் சாம்பாருங் கெட்டி

பருப்பினொடு பலகறியின் வகையை - யெடுத்து
பாடவுங் கூடுமோ பழவர்க்கத் துகையை
விருப்புடனப் பழம்வடையுங் கூட - வேணபடி
யாகப்பாயாசம் நெய் படையும் ஓட

தேன்சீனி சர்க்கரை முக்கனியும் -- அய்யன்
-திருமுன்னதாய்ப் படைத்துத் தெரிசித்துப் பணியும்
யான்சொல்லக் கூடாது ஆட்டம் - பழனி
யாண்டவன் நித்தமன்பர் மேல் தேட்டம்

பெண்களைப் பிடித்தாட்டும் பிரேதம் -அத்துடனே
பெரிதான வேதாளஞ் சேரவொரு குரோதம்
கண்கொள்ளா தறிவழிக் குங்கழுது - கூனி
காட்டேறி அலகைபேய் கண்சாயுந் தொழுது

போறேன் போறேன சாமியென்று - அலறிப்
புறப்பட்டுத் தலைச்சுற்றிப் போகுமே யன்று
நேரேதான் நிற்காது ஓடும் - அய்யன்
நீறள்ளிப் போட்டவுடன் நின்ற வழிதேடும்

தீராதபிணி யெல்லாந் தீரும் -ஞான
தீபமாம் பண்டிதன் செய்கை யிதுபாரும்
ஏராளமாக மழை பொழியும் - செந்நெல்
இருபோகமும் விளைந்திடக் குறுவை தெளியும்

குழந்தை வரந்தர வேணுமென்றே - நின்று
கும்பிட்ட பெண்கட்குக் கொடுப்ப வரமன்றே
உளந்தயவாகி அய்ய னுரைத்தால் - உடனே
உண்டாகுமே கெற்பம் உலகறியுந் தரத்தால்

மறுவருடம் வரும்பூசைக் குள்ளே - நல்ல
மைந்தனெனைத் தந்திடுவார் சந்தேகங் கொள்ளேல்
சிறுவரறியாது பிழை செய்யில் - கந்தர்
சித்தத்திலே நின்று தெளிவிப்பரது பொய்யில்

வந்திட்ட ஆண்டி பரதேசி - தங்கட்கு
வாரிநீர் மேகம் வாரி பொழிதலாச்சு
தந்திட்ட அனதானத் தினந்தான் - பூவுலகில்
தான்சொல்ல வறியார்கள் தமிழாற் பிணைத்தான்

யெடுக்க யெடுக்க குறையாமல் - பழனி
யெந்தை கந்தர்தன் மகிமையே வருமிரையாமல்
அடுக்கப்போய் நின்று பாருங்கள் - கறிகள்
அமைத்துப்படி யிருப்பதைக் கண்டு வாருங்கள்

-யின்னமெத்தனை சனங்கள் வரினும் - கொடுத்தால்
யிருந்துகொண்டே யிருக்கு மெவர்கட்குத் தரினும்
வன்னமயில் வீரனைக் காண - பத்தர்
வருகின்ற சந்தடியை விலக்காதீர் தோண

மற்றா நாட்பானக்க பூசை - செய்து
மாசத்தி வேலெடுத்து மார்பனைத்து ஓசை
சுற்றாரும் அரகரா வென்றே - கவிகள்
சொல்மேள வாத்தியத் தொனியுடனே சென்றே

கேட்டக்கேட்ட கேள்விகள் சொல்லி - மனையில்
கிடுகிடனவே சென்று கீர்த்திப்பெற்ற வில்லி
காட்டத் தூபம் பெற்று - அங்குகுடி
காத்திருப்பாரவர் தங்கால் முளைமேல் பற்று

வைத்துயெங்களைச் சந்ததியில் தானே - கவிபாட
வரமுறை தப்பாதபடி வாக்கருளுங் கோனே
வித்துபரி பாலரவர் தானே - உலகில்
வேறுகெதி யாதுண்டு விளம்பிடுவீர் மானே

அன்புடன் தைப்பூசந் தன்னில் - பழனி
யாண்டவன் சன்னதியில் வாரபரி சுன்னில்
யென்பாவிற் சொல்லமுடியாது - காவடிகள்
யேராளம் யேராளம் யெண்ணுதல் கூடாது

பால்காவடி களிரு கோடி - உத்தேசம்
பகருவேன் சர்க்கரைக் காவடிகள் ஒருகோடி
வேல்போன்ற கண்மாதர் கோடி - உருவிலியை
வென்றஅர னடியார்கள் மேலுமிரு கோடி

அங்கவங்கங் கலிங்கத் தெலுங்கம் - மலையாளம்
அச்சிகொச்சி யீழவம் பல்லவந் துலுங்கம்
சங்கமிதி லிருந்துசெல் சனங்கள் - துகையை
தான்சொல்லக் கூடுமோ சாதியினி னங்கள்

மச்சத்தை யறுத்துக் கறியாக்கி - யங்குகொண்டு
வருகின்ற காவடியை அவிழ்க்க வுயிராக்கி
அச்சமின்றித் துள்ளிவிழும் செலத்தில் - கண்காட்சி
யாவரும் கண்டுடல் களிப்பார் அத்தலத்தில்

சுத்தசெலக் காவடி பாலாச்சே - அதுவைச்
சுற்றிலுமிருந்து கண்டு தொழுவர் பெருமூச்சே
மெத்தமணல் காவடிசர்க்கரை தான் - ஆகி
விட்டதனைக் கந்தர் சிரங்கொட்டலது முறைதான்

அக்கினியைக் காவடியில் கட்டி - அவிழ்க்க
அதில்வஸ்திர மிருந்தெடுத்து யாவருங் கைகொட்டி
முக்கியமுள்ள கந்தருக்குச் சாத்தி - கண்டு
முனிசித்தர் மானிடர்கள் யாருங் கண்டேத்தி

அரிசிகட்டி வரச்சாத மாச்சே - அதையெடுத்து
அய்யனுக்கு முன்படைத்து அன்பர்க் களித்தாச்சு
தெரியவுருளைக் கல்லைக் கட்டி - வரவதுவுந்
தித்திக்குங் கற்கண்டு கந்தன்முன்னாற் கொட்டி

தூப தீபா ராதனைகள் - செய்து
துதித்துக் கொண்டாடியே தொண்டர்தம் மனைகள்
தாபசோபங் களுந்தீர - வுண்டு
தகுசெல்வ பந்தான சந்தானம் மீற

பங்குனி உத்திரந் தன்னில் - பழனி
பதியில் வளர்கந்தர் தெரிசனம் பண்ணவுன்னில்
கொங்கு வங்காள முதலுள்ளோர் - யெல்லாங்
கூட்டங் கூட்டமாய் வந்துகூடியங்கு கொள்ளார்

வந்தபரிசு கட்கன்ன தானம் - வணிகன்
வாரிச்சொரி கின்ற வளமோ நிதானம்
எந்தவிதஞ் செந்தமிழில் சொல்வேன் -வற்கவகை
யெண்ணப்போமோ யேட்டில் யெழுதியா வெல்வேன்

அப்பளம் வடையுடன் பாயாசம் - நெய்பருப்
பத்துடன் சாம்பாரு ரசம்படைத் தாயாசம்
முப்பழஞ் சர்க்கரை தேனும் - படைத்து
முக்காலும் வலம்வந்து முடிவணங்கித் தானும்

அரகரா வென்ற யிசையாலே - யிந்த
ஆனந்தக் களிப்புடன் அனேக தமிழாலே
புரகர தகனன் அருள்பாலா - வென்று
போற்றியே கவிமாரி பொழிந்தார்கள் வேலா

குன்றைமலை நிற்கும் நேசா - யெங்கள்
குலங்காத்து நலந்தந்த குகனே யம்ராசா
கன்றைவிளவினி லெறிந்தார் மருகா - யென்றுங்
கருணைவைத்துக் காப்பாற்றுங் கடலென்று முருகா

தாம்பீர வர்ணநதி நடுவில் - குறுக்குத்
தலமொன்றுயுண்டு தண்ணீர் நிறைந்த மடுவில்
காம்பீரமாக விளக் கெரிய - மதிலுங்
காணமலே செலங்கடல் போலத் தெரிய

நாலுநாள் வடிவின்றிச் செலந்தான் - நிறைந்து
நாளுக்குநாள் வடிந்து தலந்தோணும் நலந்தான்
வேலுக்கு கந்தமுரு கேசன் - தலமும்
வெளியாகித் தெரிந்தவுடன் வரும்பத்தர் நேசன்

....ந்து கொண்டே யிருக்க ....யன்பர்கள்
....தலத்துமகிமை போலில்லை யென்று உருக்க
போற்றுமன்பர் கணக்கி லடங்காது - வந்து
பூசித்துத் தொழுவார்கள் பூவிவிட மேது

கண்ணாரக் கண்டு தெரிசித்தேன் - யெந்தன்
கவலைவிட் டேகினது நின்று உபசரித்தேன்
பண்ணாரு மன்னை தெய்வானை - வள்ளியின்
பாதமலர் முடிச்சூடி சாதனை செய்வேனே

திருப்பரங் குன்றுறைந்தாய் வாழி - அன்று
தேவர்க்கு அரசிட்ட தேவனே வாழி
திருச்செந்தூர் வாழ்முருகா வாழி - சூரைச்
சிதைத்திட்ட தெய்வமே சித்தனே வாழி

யீராறுதலத் துறைந்தாய் வாழி - வேதனை
யெண்ணாமற் சிறைவைத்த யிறையோனே வாழி
சீராவினங் குடியாய் வாழி - வள்ளித்
தெய்வத்தைக் கலியாணஞ் செய்தவர் வாழி

குன்றுதொறு நின்றகுகா வாழி - யெங்கள்
குடிகாத்த குன்றக்குடிக் குமரா வாழி
யென்றுமழகர் மலையாய் வாழி - யீசற்கு
யிசைத்த உபதேசகுரு யென்னாளும் வாழி

குறுக்குத்துறை யுறைவோனே வாழி - யார்க்குங்
குலதெய்வமாய் விளங்குங் குமரய்யா வாழி
மருக்கமழுங் கடம்பணிந்தாய் வாழி - சத்தி
வடிவேலைக் கரந்தேந்தும் வள்ளலே வாழி

ஆதிசிதம்பர நடனா வாழி - யெங்குலத்தை
ஆளடிமையாய்க் கொண்ட யப்பனே வாழி
சோதிசிவ காமித்தாய் வாழி - அங்கு
துலங்குகம்பத்தே யிருந்துசூர் தடிந்தாய் வாழி

வெண்டாமரை நிறைந்தாய் வாழி - ஆதி
வேதனாவி லுறைந்த வேதவித்தே வாழி
பண்டாய்யென் குலம் வசிப்பாய் வாழி - மேலான
பாக்கியமது தான்தந்த பாரதி வாழி

பாற்கடல் துயில்மாயன் வாழி - அவர்தம்
பங்கிலுரை யிலக்குமியின் பாதமலர் வாழி
தீற்கமுள்ள கயிலாயம் வாழி - அதன்மேவு
சிவசிவா சிவசிவா சிவசிவா வாழி

யேரகங்காணி கொண்டாய் வாழி - பார்வதி
யெனும்நாமம் பெற்றிட்ட யீகபரி வாழி
கார்கரட முகத்தண்ணல் வாழி - யெவற்றிற்னுக்குங்
தான்முந்தி நின்றுவர தாசனும் வாழி

*பழனியாண்டவர் சிந்து பாமாலை முற்றும்*

Printed by

**Royapettah Stationery and Printing and Allied Products Producers Indl. - Co.op Society Ltd.**

26, Koya Arunagiri First Street Royapettah

Madras - 600 014. ☎ : **84 56 70**